
பொன்னி

PONNI 25-8-51



1—9—51-ல் வெளிவருகிறது!



இதில் வைஜந்தி, குமாரி கமலா, லலிதா—பத்மினி, ஸி. ஆர். ராஜகுமாரி, குமாரி துளசி, குமாரி கல்யாணி, வனஜா, தங்கமணி, கேரள சகோதரிகள். நடராஜ்—சகுந்தலா, வி. எஸ். சுசீலா முதலியோர்களைச் சந்திக்கலாம்.

★

அழகான மூவர்ண அட்டை. விலை அணா 12

தபாலில் பெற 0—14—0 அனுப்பவேண்டும்.

எமது சிலோன் ஏஜண்ட் மோஹன் & Co., LTD., கொழும்பு.

NA-5

பொன்னி
பொருளடக்கம்


மலர் 5 | ஆகஸ்ட் 25, 1951 | இதழ் 12

திருவள்ளுவர் ஆண்டு 1982 ஆவணித் திங்கள் 9-ம் நாள்

உணவு மந்திரி வழிகாட்டுகிறார்!

தென்னிந்தியாவில் கோயம்புத்தூருக்கு நான் சென்றிருந்த போது அங்கே மக்களுக்கு இருபத்தெட்டு வித்தியாசமான ரகங்களில் அரிசி வழங்கப்பட்டு வருவதைக் கண்டேன். இங்கே புது டில்லியில் பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் என்ன ரக அரிசி நடைமுறையில் வழங்கப்பட்டு வருகிறதென்று எனக்குத் தெரியாத பட்சத்தில் எனக்குத் தேவையான அரிசி எங்கிருந்து வருகிறதென்று ஒரு அங்கத்தினர் கேட்கிறார். அவர் ஐயம் நியாயமே. ஆனால் நான் உணவு மந்திரியானதற்குப் பிறகு அரிசிச் சாதம் சாப்பிடும் பழக்கத்தையே கைவிட்டுவிட்டேன்.

[பார்லிமெண்டில் இந்திய உணவு மந்திரி திரு. கே. எம். முன்ஷி இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்]


'எலியும் பூனையும்' என்பதற்குப் பதில் வேறொரு உவமை சொல்.
'தாண்டனும் நேருவும்' என்று சொல்லலாம் சார்.
எலியும் பூனையும்
கீரியும் பாம்பும்

காங்கிரஸ் நெருக்கடி

காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்தும் மத்திய தேர்தல் கமிட்டியிலிருந்தும் நேரு ராஜினாமாச் செய்து விலகியிருப்பது காங்கிரஸில் பெரிய நெருக்கடியைத் தோற்றுவித்திருக்கிறது. ஆஸாதும் நேருவை ஒட்டி அப்பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார். காரியக் கமிட்டி 'தாண்டனும் நேருவும் கூடிப்பேசி நல்ல முடிவுக்கு வருமாறு' கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றிவிட்டுக் கலைந்துவிட்டது. இருவரும் சந்தித்தார்கள்; சிக்கல் தீரவில்லை; முற்றியது.

அகில இந்தியக் காங்கிரஸ் அடுத்த மாதம் டில்லியில் இந்த நெருக்கடியைப் பரிசிலனை செய்வதற்காகக் கூட்டப்பட்டிருக்கிறது. அதற்கிடையில் வாதப்பிரதிவாதங்கள் நடைபெறுகின்றன. 'காங்கிரஸில் நேரு கட்சி பெரிதா? தாண்டன் கட்சி பெரிதா?' என்று ஆரூடக் கணிப்புக்கூடத் தொடங்கிவிட்டது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் தாண்டனுக்குத்தான் செல்வாக்கு அதிகம் இருக்கிறதென்கின்றனர் சிலர். ஆனால் நேரு, காங்கிரஸ் சட்டசபைக் கட்சியின் ஒருமித்த ஆதரவை அண்மையில் பெற்றிருக்கிறார். அக்கட்சிக் கூட்டத்தில் அவர் பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்குத் தந்திருக்கும் விளக்கம் அவ்வளவு விளக்கமாக இல்லாவிட்டாலும், சில உண்மைகள் அப்பேச்சில் வெளியாகியிருக்கின்றன. காங்கிரஸில் படிப்படியாக நேருவின் செல்வாக்கு குறைந்து வந்திருக்கிறதென்பது ஒரு உண்மை! நேரு தீர்மானங்களைக் காங்கிரஸ் நிர்வாகத்தினர் நிறைவேற்றுகிறார்கள்; ஆனால் காரியத்தில் எதிரிடையாக நடந்துகொள்கிறார்கள் — இது மற்றொரு உண்மை. இத்தகைய 'இரட்டை வாழ்வால்' பொதுமக்களிடம் காங்கிரஸ் செல்வாக்கு குறைந்துவிட்டது — இது மூன்றாவது உண்மை!

இந்தச் செல்வாக்குக் குறைவுக்குத் தாண்டன் முதலியோர் பொறுப்பு என்பது நேரு குற்றச்சாட்டு. கட்சியில் பிளவுகள் ஏற்படக்கூடாது; பொதுமக்கள் காங்கிரஸிடத்தில் நம்பிக்கையோடு இருக்கவேண்டும். இந்த நிலை ஏற்பட வேண்டுமானல் தற்சமயம் காணப்படும் 'நிர்வாகப் போக்கு' மாறவேண்டுமென்பதுதான் அவர் கட்சி, தாண்டன் கட்சியினர் நேரு கோருவதென்ன என்பது புரியவே இல்லை என்று ஒரேயடியாய் மழுப்புகின்றனர். 'காரியக் கமிட்டியை மாற்றியமைப்பதைவிட, தான் ராஜினாமாச் செய்வது மேல்' என்று தாண்டன் கருதுகிறார். இந்நிலையில் இரு

விடாக்கண்டர்களும் டில்லியில் எந்த முடிவுக்கு வரப்போகிறார்களென்பது புரியவில்லை.

நம்முடைய கருத்தெல்லாம் காங்கிரஸை உடனடியாகக் கலைத்துவிட நேரு சிபாரிசு செய்யவேண்டுமென்பதுதான்! ஒரு ஸ்தாபனம் வேண்டுமென்பதற்காக அதை 'விடுதலை' கிடைத்த பிறகும் வைத்துக்கொண்டதற்குக் கைமேல் பலன் கிடைத்துவிட்டது; இதை நேரு உணர்கிறார். காங்கிரஸ் தம்மை விட்டு—மக்களை விட்டு—விலகிச் செல்கிறது என்று வெளிப்படையாகவே கூறுகிறார். இத்தனை தூரம் உண்மை நிலையை உணரும் அவர், இன்னும் காங்கிரஸைக் கட்டி வளர்க்க ஆசைப்படுவதுதான் விந்தை!

தாண்டன், காங்கிரஸை நேரு விருப்பம் போல் ஆட ஒருக்காலும் விடப்போவதில்லை; நேருவும், தாண்டன் போக்கிற்கு ஒப்பப் போவதில்லை; காங்கிரஸ்காரர்கள் "நீங்கள் இருவரும் ஒத்துப் போவது நல்லது" என்று சொல்வார்களே ஒழிய அவர்கட்கு வேறு வழி தெரியாது. எனவே நேரு உண்மையிலேயே இந்தியநாட்டு மக்களிடம் காங்கிரஸ் கட்சியை விடப் பற்றுள்ளவராயிருந்தால், டில்லியில் கூடும் அ. இ. கா. கூட்டத்தில் 'காங்கிரஸைக் கலைத்துவிடுவோம்; அவரவர்கள் விரும்பும் கட்சியில் சேர்வோம்' என்று அறிவித்துவிடவேண்டும். அப்படியின்றித் தாண்டனைத் திருத்திவிடலாமென்றோ, அல்லது ஒவ்வொரு ராஜ்யத்திலுமுள்ள காங்கிரஸ்காரர்களைத் திருத்திவிடலாமென்றோ அவர் நினைப்பாரானால் அது வெறுங் கனவாகத்தான் முடியும்!

தேர்தலையும், தேர்தலில் வெற்றிபெற்ற பின் கிடைக்கும் சட்டசபை மெம்பர் பதவியையும், அப்பதவி அளிக்கவிருக்கும் 'சுகபோகங்களையும்' கனவு கண்டுகொண்டிருக்கும் காங்கிரஸ்காரர்கள் நேருவின் சீரமைப்பு முயற்சிக்கு எங்கே செவி சாய்க்கப் போகிறார்கள்? 'காங்கிரஸ் தலைவர் யாராயிருந்தாலென்ன? நம் பதவி வேட்டைக்கு அவர் ஆதரவு தந்தால் போதும்' என்ற போக்கில் நடமாடும் காங்கிரஸ்காரர்கள் எண்ணிக்கையற்றவர்களல்லவா? "மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும்; பழைய ஒத்துழையாமை இயக்கத்தை நினைத்துப் பாருங்கள்" என்று நேரு கூறும் வார்த்தைகள் மக்களின் எஜமானர்களாகத் தற்சமயம் ஆட்சி செலுத்தும் காங்கிரஸ்காரர்களின் காதில் விழவா போகின்றன? எனவேதான் நேரு வீண் முயற்சி செய்கிறார்; தம் 'ராஜினாமா' என்னும் அதிர்ச்சியால் காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ள நோயைக் குணப்படுத்திவிடலாமென்று தவறாக நினைக்கிறார் என்று சொல்கிறோம். காங்கிரஸில் ஏற்பட்டுள்ள நெருக்கடி பொதுமக்கள் காங்கிரஸைப் புரிந்துகொள்ள அரியதொரு வாய்ப்பு என்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

நாவலாசிரியர் தாமஸ் ஹார்டி

மு. அண்ணாமலை

1

மேல்நாட்டிலே சில இடங்களில் பெண்களுக்கெனத் தனி நூல்நிலையங்களும் குழந்தைகளுக்கெனத் தனி நூல்நிலையங்களும் இருக்கின்றன. பெண்பாலர்க்குரிய நூல்நிலையமொன்றில் ஓர் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. புத்தக ஓரத்தில் வாசகர்கள் என்னென்ன குறித்து வைத்திருக்கின்றனர் என்று ஒரு பட்டியல் சேகரிக்கப்பட்டது. அவ்வாறு எடுக்கப்பட்ட வாசகங்களில் தாமஸ் ஹார்டியைப்பற்றிப் பெண் வாசகர்கள் சிலர் குறித்திருந்தவை வேடிக்கையானவைகளாகும். “இந்த ஹார்டி ஒரு கொடியவன்; கல்நெஞ்சம் படைத்த கயவன்” என்று ஒரு பெண் இவரது நாவல் ஒன்றில் குறித்திருந்தாளாம். அவளது வெறுப்புக்கும் காரணமுண்டு. தாமஸ் ஹார்டியின் நாவல்களில் வரும் பெண்கள் பெரும்பாலும் நிதான புத்தி அற்றவர்களாகவும் எதையும் தீர முடிவு செய்து செயல் புரியும் பண்பற்றவர்களாகவும், உணர்ச்சி வசத்திற் காட்படுபவர்களாகவும் இருக்கிறார்கள். நாற்பது வயதான குமரி இருபது ஆண்டு நிறைந்த இளைஞன் ஒருவனிடம் ‘காதல் நாடகம்’ நடத்துகிறாள். மூன்று குழந்தைகளுக்குத் தாயான பின்னரும் ‘காதல் மாடத்’திலே ஏறிக் களித்திருக்க விரும்பும் ‘கன்னித் தாய்’களையும் காணத்தான் செய்கிறோம். மிக உயர்தரமான பெண்கள் ஓரிருவரைத்தான் இவர் நாவல்களில் சந்திக்கிறோம். என்றாலும் இவர் பெண்ணினத்தின் மீதே தவறான கருத்தும் வெறுப்பும் கொண்டவர் என்று முடிவு கட்டிவிட முடியாது. பெண் கதைஉறுப்பினர்கள் அனைவரையுமே இவர் ‘கோணலான பார்வை’யுடன் சித்தரித்துக் காட்டினார் என்று கூறுவதற்கில்லை. இவருடைய ஏடுகளில் சில கள்ளங் கபடமற்ற பெண்களைக் காண்கின்றோம். அவர்களின் வாழ்வு கருதி மிக இரங்கவேண்டியவர்களாகிறோம். பெண்வேட்டைக்காரர்களின் வலையிலே சிக்கி, காதல் என மயங்கி, வெறியிலே வெளிவந்த சொற்களை உறுதிச் சொற்களென நம்பி, ‘சரஸ சல்லாபத்’திலே தன்வயமிழந்து பானி ராபின் (FANNY ROBIN) என்ற பெண் தவிக்கிறாள். அதினின்று தன்னை மீட்டுக்கொண்டு இடர்

களை எதிர்த்துப் போராடி வெல்லத் தெரியாமல் சாவையே விடுதலையாகக் கருதி அவள் மடிந்து கிடக்கும்போதும், மணமாகாமல் கருவின்ற "கன்னித் தாயாக" அவள் ஊர்ப்பழிக்குரியவளாகும் போதும் அவளது வாழ்விலும் ஒழுக்கத்திலும் படிந்த கறைக்காக வருந்திக் கண்ணீர் உதிர்க்கிறோம்.

பெண்களுக்கெனவே உள்ள பலவீனத்தையும் உணர்ச்சிக்கு அடிமையாகி அவர்கள் தடுமாறுவதையும் விருப்பத்திற்கு அடிமையாகிக் கடமையை மறப்பதையும், ஒழுக்கத்தில் ஏற்படும் நலக் கேடுகளையும் இயல்பு கெடாது அழகுறச் சித்தரித்திருக்கிறார்.

●

பைத்தியக்காரக் கும்பலுக்கு அப்பால் என்னும் நாவலில் வரும் பாத்சிபா (Bathsheba) என்னும் கதைத் தலைவி மூவரைக் காதலிக்கிறாள்; இருவரை மணக்கிறாள். முதல் காதலனாகத் தோன்றுபவன் ஒரு பண்ணைக்கார இளைஞன். காபிரியல் (Gabriel) என்பது அவன் பெயர். அவனோர் சிற்றூர்ப்புறத்தான். எதையும் புரிந்துகொள்ளவும் தானே சிந்திக்கவும் ஆற்றல் உள்ளவன். நல்ல ஒழுக்கமும் தூய சிந்தையும் உடையவன். அவன் பாத்சிபாவைக் காதலித்தான். பாத்சிபா அவனது காதலை அடியோடு உதறித் தள்ளிவிட்டாள் என்று சொல்ல முடியாது. ஆனால் அச்சிறு காதல் வலியுறவில்லை. ஆரவாரத்தை அவள் எதிர்பார்த்தாள்; காபிரியலிடம் அமைதி குடிகொண்டிருந்தது. அலங்காரமான பேச்சை எதிர்பார்த்தாள்; அவனிடம் அது சூன்யமாக இருந்தது. ஆடம்பரத்தை எதிர்பார்த்தாள்; அவன் அடக்கத்தின் உருவாக அமைந்திருந்தான். அதனால் அவள் வேறொரு காதலனை நாடிக்கொண்டிருந்தாள்.

பாத்சிபா வேளாண்மைப் பண்ணைக்குத் தலைவியாகவும் சொந்தக்காரியாகவும் இருந்தாள். காபிரியல் அந்தப் பண்ணையிலேயே மேலாளாக வேலை பார்த்து வந்தான். தரத்திலே ஏற்பட்ட தாழ்வும் அந்தக் 'காதல் தோல்வி'க்குக் காரணமாய் அமைந்ததென்னலாம்.

பாத்சிபா இருந்த சிற்றூரில் அவள்தான் மிக்க அழகி என்று ஊரார் பேசிக்கொள்ளுவர். அந்த வட்டாரத்திலே அவளைப்பற்றிப் பேசாதவர்களும் அவளது அழகிலும் நடையிலும் ஈடுபடாதவர்களும் இல்லையென்னலாம். ஆனால் அங்கே ஒரே ஒரு மனிதன் மட்டும் அவளை ஏறெடுத்துப்பார்க்காமல் அவளைப் பற்றிய பேச்சுக்களிலும் ஈடுபடாமல் இருந்தான். அவன்தான் பால்டுவுட் (Boldwood). எப்போதும் அவன் கவலை தோய்ந்த முகத்தோடு காணப்பட்டான். வாழ்க்கையில் யாதொரு விருப்பமின்றி அமைதியாக இருக்கும் அவனை ஊரார் பலப்படப்பேசிக்கொண்டனர். இளமையில் அவன் ஏதோ காதல் முயற்சியில் தோல்வி

அடைந்து வாழ்க்கையில் 'விரக்தி' மனப்பான்மை கொண்டுவிட்டான் என்று சிலர் சொல்லிக் கொண்டனர். அவனுக்கு நாற்பது ஆண்டுகள் நிறைந்திருக்கலாம். அவனைப் பல முறை பாத்சிபாவும், அவளது தோழியும் பார்த்திருக்கிறார்கள். அவன் ஒருமுறை கூட ஏறிட்டு அவளைப் பார்த்ததில்லை. அவளது அழகுநலம் பற்றி வியந்து பேசியதில்லை. அப்படிப்பட்ட 'வேடிக்கையான மனிதனை' நையாண்டி செய்ய விரும்பிப் பாத்சிவா காதல் கடிதம் ஒன்றை எழுதி அனுப்பினாள். அந்த 'அப்பாவி' மனிதன் அந்தக் காதல் கடிதத்தை உண்மை யென்று நம்பி உயிரையும் அவளுக்கே அடைவு வைக்கத் தயாராகிவிட்டான். அவனது வாழ்வின் போக்கையே அப்போலிக் காதல் கடிதம் மாற்றி அமைத்து விட்டது. ஓடோடி வந்து அவளையே வட்டமிடத் தொடங்கினான். 'உண்மையான காதல் கடிதம் அன்று; எள்ளி நகையாடுவதற்கென்று எழுதினேன்' என்று எத்தனையோ முறை அவள் சொல்லியும் அவன் கேட்கவில்லை. அவளை விட்டு அவன் நகர மறுத்துவிட்டான்.

விளையாட்டு வினையாய் முடிந்தது. குறும்புக்காக அவள் செய்தது பெரிதாகிவிட்டது. கம்பளி என்று கரடியின்மேல் கைவைத்தது போல் ஆயிற்றுப் பாத்சிபாவின் நிலைமை. "என்னை மணவாய் ஆயின் உயிர்தரியேன் உனைப்பிரியேன்" என்று 'மடலேற்றம்' பாடினான் பால்டுவுட். மணம்பற்றி எண்ணி முடிவு செய்யச் சிறிது காலம் வேண்டும் என்று அவனிடம் சொல்லி அப்பொழுதைக்கு ஒரு தற்காலிக விடுதலை பெற்றாள். அந்நிலையில் மூன்றாவது காதலன் தோன்றுகிறான். அவனொரு படைத்தலைவன். டிராய் (Troy) என்பது அவன் பெயர். அந்தப் போர்வீரன் ஆரவாரமாகவும் ஆடம்பரமாகவும் திரிந்தான். மங்கையரை மயக்கும் திறமையான பேச்சு அவனிடம் இருந்தது. பெண்களோடு பேசுவதை ஒரு கலையென்று அவன் கருதினான். சூதாடுகிறான்; நாணயம், நம்பிக்கை, ஒழுக்கம் முதலியவற்றை உப்புச்சப்பற்ற பண்டம் போல் மதிக்கிறான். என்றாலும் அவன் உள்ளத்தால் கொடியவனோ வஞ்சகனோ அல்ல. அவனொரு களிமகன். ஹார்டி எப்பொழுதும் தன் நாவல்களில் 'வில்லன்' என்ற பட்டயத்தோடு எந்தக் கதையுறுப்பினனையும் காட்டுவதில்லை. மன உணர்ச்சிகளையும் அதன் பயனான செயல்களையும் ஒன்று கூட்டி ஆராய்பவர் ஆகலின் எந்த உறுப்பினனையும் முழுக்க முழுக்கக் கெட்டவன் என்று காட்டி 'மகாபாபி', 'அயோக்கியன்' என்று 'அர்ச்சனை' செய்வதில்லை. ஒவ்வொரு மனிதனிடமும் சில குறைவுபடும் பகுதிகள் உண்டென்பது அவர் நம்பிக்கை.

டிராயைக் கண்டு அவனது பண்பு நலங்களை

முழுக்க ஆராய்ந்து அறியாமல் மேலெழுந்தவாரியாகக் கண்டு ஏமாந்து விட்டாள் பாத்சீபா. அவனுடைய ஆரவாரத்திலும் அலங்காரத்திலும் மயங்கினாள். மணமும் நடந்தது. மண வாழ்க்கை தொடங்கியதும் சார் ஜண்ட் டிராயின் உண்மையான 'சொரூபம்' கொஞ்சம் கொஞ்ச மாக வெளிப்படலாயிற்று. அவள் அவனை வெறுக்கத் தொடங்கி னாள். தன்னை மணக்குமுன் தனது பணியாளாக இருந்த 'பானி ராபின்' என்னும் அழகிய இளம் பெண்ணைக் கெடுத்தவன் தன் கணவன் டிராய்தான் என் பதைப் பாத்சீபா தெரிந்து கொண்டபோது, அவளது வெறுப்பு உச்சநிலை அடைந் தது.

அந்நிலையில் ஒருநாள் டிராய் தானாகவே சொல்லாமல் ஓடி எங்கோ மறைந்து விட்டான். ஊரார் அவன் ஆற்றில் விழுந்து இறந்துவிட்டதாகவே பேசிக் கொண்டனர்.

சில திங்கள் கழிந்தன.

இரண்டாவது காதலனாகிய பால்டுவுட் தன் காதல் படை யெடுப்பையும் பழைய 'பல்லவி' யையும் மீண்டும் பாடத் தொடங் கினான். இந்தத் தீராத் தொல்லையை வெளியில் சொல் லவும் முடியவில்லை; மெல்லவும்



முடியவில்லை. தானாக இழுத்துக் கொண்ட வம்பாயிற்றே!

பலநாள் பொறுத்தாள்; முறியடிக்க முடியாத அந்தப் படையெடுப்புக்கு அவள் பணிந்தாள் — பணியவேண்டியிருந்தது! சில ஆண்டுகளுக்குப்பின் மணந்து கொள்வதாக உறுதி கூறினாள். அந்த மகிழ்ச்சியிலே பால்டுவுட் ஒரு விருந்து ஏற்பாடு செய்தான். விருந்து நடந்தது. வேண்டா விருப்போடு பாத்சிபா அதில் கலந்துகொண்டாள்.

விருந்து நடந்துகொண்டிருக்கும் போது டிராய் திடீரென்று தோன்றினான். எல்லோரும் டிராயை நோக்கினர். அவன் நேராகப் பாத்சிபா இருந்த இடத்திற்கு வந்தான். கணவன் என்ற உரிமையைக் காக்க அவன் அவளை வீட்டுக்கு அழைத்தான்.

"எழுந்திரு; வா...வீட்டுக்குப் போகலாம்"

மறுமொழி யில்லை.

"எழ மாட்டாயா?..எழு...... போவோம்"

மீண்டும் மறுமொழி யில்லை.

டிராய் படீரென்று கையைப் பிடித்து இழுத்தான். உடல் வலியாலோ, உள்ளக் கசப்பாலோ எதிர்பாராமல் பாத்சிபா கத்திவிட்டாள். அவளது பரிதாபமான கதறலைக் கேட்டவுடன் பால்டுவுட் துப்பாக்கியை எடுத்து டிராயைச் சுட்டு விட்டான். அவன் அதை வேண்டும் என்றே செய்தவன் அல்லன் - பாத்சிபாவின் பரிதாபமான குரல் தான் அவனை அம்மாதிரி ஆக்கியிருக்க வேண்டும். தன்னை மறந்து வெறிபிடித்த பைத்தியம் போல் ஆகிவிட்டான் பால்டுவுட்.



டிராய் கீழே விழுந்து கிடந்தான். உயிர் சிறிது சிறிதாக அகன்றுகொண்டிருந்தது. என்ன இருந்தாலும் பாத்சிபா

பெண்தானே! அவளைக் 'கண வன்' என்ற பாசம் கவ்விக் கொண்டது. கணவன் தலையைத் தன் மடியில் கிடத்திக் கொண்டு கதறினுள். "ஐயோ, பால்டுவுட் கொன்று விட்டானே" என்ருள்.

பால்டுவுட் சட்டத்தின் திருமுன்னிலைக்குச் சென்ருன். குழப்பமும் துன்பமும்சோர்வும் சூழ்ந்து நின்றதால் பாத்சிபா அமைதியைத் தேடி வீட்டிற்குள்ளேயே ஒடுங்கிக் கிடந்தாள். சில நாட்கள் ஓடின. திங்கள்கள் கடந்தன. நாட்போக்கில் உள்ளம் துயர்ச்சூழலை மறந்து கொண்டு வந்தது.

சட்டம், சாவு இரண்டிற்கும் இலக்காகிய இரு காதலர் நீங்க எஞ்சி நின்ற முதற் காதலனை காபிரியல் அவள் மனத்தில் வலிவான இடத்தைப் பெறுகிருன். குழப்பமும் ஆரவாரமும் மிக்க வாழ்வில் சலிப்படைந்து அமைதியைக் தேடி நின்ற போது கருணமூர்த்தியாகத் தோன்றிக் காபிரியல் கைகொடுக்கிருன்.

முதல் காதலன் இரண்டாவது கணவனுனன்!

●

இந்த நாவலில் வரும் தலைவி பாத்சிபா எதிர்காலத்தைப் பற்றி நன்கு உணர்ந்துகொள்ள முடியாதவளாகவும், திண்மையும் தீர்மானமான முடிவும் அற்றவளாகவும் இருக்கிருள்; ஆரவாரத்தில் மயங்கி உண்மையை மறக்கிருள். அதனல் சீர்கெட்டு அலைகிருள். டிராய், பால்டுவுட் ஆகிய இருவரிடமும் பட்டுப் பழகிப் பார்த்த பின்னர்தான் காபிரியலின் எளிமையையும் அருமையையும் அவளால் அணு அணுவாக உணர்ந்துகொள்ள முடிகிறது.

ஹார்டி எவ்வாறு எழுதினும் அதில் இயற்கைப் போக்கும் மன இயல்பும் எள்ளளவும் மாறிக் கிடப்பதில்லை. நடக்க முடியாதனவற்றை எழுதினன் என்ருே, வன்மம் காரணமாக வேண்டுமென்றே வரைந்தான் என்ருே, யாரும் கூறிக் கழிக்க முடியாது.

கணவனும் மனைவியுமாக வாழ்வதிலேதான் எத்தனை சிக்கல்கள்? எத்தனை குழப்பங்கள்? தக்க கணவனைத் தேடிக்கொள்வது அல்லது நல்ல கணவன் அமைவது என்பது அத்துணை எளிதானதா? ஆண் — பெண் பிரச்சனைதான் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிக் கிடப்பதா? உணவு உடை என்ற இரண்டு தீராத பெரும் தேவைகளுக்கப்பால் மனிதப் பிராணிகள் இடர்ப்பட்டு மனமொடிந்து அமைதி இழந்து, தடுமாறித் துடிக்கவேண்டிய பல சோகக் கட்டங்கள் இருக்கின்றன என்பதை ஹார்டி எடுத்து எழுதிக் காட்டினர்.

உணர்ச்சிக்கும் அறிவுக்கும் இடையிலே, கடமைக்கும் விருப்பத்திற்கும் இடையிலே நின்று நிலைகுலைந்து தடுமாறும் மனிதச் சித்திரங்களை அவரது நாவல்களில் காண்கிருேம். காதலும்

வாழ்க்கையும் மனித அமைப்புக்குள் கட்டுப்பட்டுக் கிடக்காமல் வளர்ந்து, நெளிந்து, தாவி ஓடுகிற காட்டு விலங்குகள்; மனிதன் வென்று அடக்கிக் கொள்ள இயலாதனவற்றில் காதலும் ஒன்று என ஹார்டி நினைத்தார்.

மனித வாழ்க்கையையே இவர் சோகத் திரையாகக் கருதினர். மனித வாழ்க்கையின் துயர்க் கோணங்களையே இவர் அதிகமாக விரித்துக் காட்டினர். அவற்றில்தான் அவரது வெற்றியும் நிலைபெறுவதாயிற்று. இவரது நாவல்களைத் தொடர்ந்து படிக்கும் ஒருவன் காதல், ஆண்—பெண் முதலிய பிரச்சனைகளில் நம்பிக்கையற்று 'விரக்தி' மனப்பான்மை கொள்ளுவானுயின் அதிலே வியப்பொன்றும் இருக்க முடியாது. அது கருதியே இவரை 'இயற்கை குன்றுக்குறை நோக்கினர்' (Pessimistic realist) என்று விமரிசகர்கள் அழைப்பர்.

மேலே எடுத்துக்காட்டியிருக்கும் பைத்தியக்காரக் கும்பலுக்கு அப்பால் என்னும் நாவலில் ஆசிரியரின் சோகநாதத்தை அதிகமாகக் காண முடியாது. டெஸ் (Tess) என்னும் நாவலிலும் ஜுட் தி அப்ஸ்கியூர் (Jude the obscure) என்ற நாவலிலும் சோக விரிப்பு உச்சநிலை அடைகிறது.

தாமஸ் ஹார்டியை முழுக்க முழுக்க— 'குறைநோக்கினர்' (Pessimist) என்று அறுதியிட இயலாது. எந்தக் கலைஞனும் முழுமையும் நிறைநோக்கினனுகவோ (Optimist) குறைநோக்கினனுகவோ இருக்க முடியாது. கூடுதல், குறைதல் நோக்கியே பெயர் சூட்டப்படுவர்.

ஒரு பொருளின் குறைகளையே உற்றுநோக்கி ஆராய்ந்து, குறைகளையே பேசிக்கொண்டிருப்பவன் 'குறைநோக்கினன்' ஆவன். ஒரு பொருளின் நிறையையே கண்டு நிறையையே பேசி, அங்கலாய்த்துக் கொண்டிருப்பவன் 'நிறைநோக்கினன்' ஆவன். "ஆகா! இந்த உலகம் எத்துணை இன்பகரமானது! நான் பாடுவேன்; குடிப்பேன், மகளிரொடு ஆடுவேன்" என்று பாடும் கவிஞர்கள் இவ் வரிசையைச் சேர்ந்தவர்கள். மேல் சொன்ன இருவகை நோக்கும் கருத்தும் இன்றி ஒருவன் முழு அறிவும் அடைந்தாகக் கருத முடியாது.

தாமஸ் ஹார்டியின் நூல்களைப் பயில்வோர் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து 'அகதி' மனப்பான்மை அடைந்து விடுவர் என்று கருதுவதற்கு இடமில்லை. ஹார்டி நாவலாசிரியர் மட்டுமன்று, கவிஞராகவும் வாழ்ந்தார். எனவே அவரது கவிதை உள்ளம் குறையே காணவேண்டும், குறையே பேச வேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்டு இருக்க முடியாது. அவர் கண்ணெதிரில் கண்டனவற்றைக் காதால் கேட்டனவற்றை, நடக்கக் கூடியதை அவர் எழுத விரும்பினர். அவரது துணிவுதான் குறிப்பிடத்

தக்கது. அவரது துணிவு பிரஞ்சு நாவலாசிரியர்களிடம் பரவியிருந்த ஆபாசத் துணிவன்று. ஹார்டியின் துணிவு தரத்தால் உயர்ந்ததாகும். மாபஸானைப் போல உடல்வெறியை அடிப்படையாகக் கொண்டதன்று. மனிதர்கள் எத்தனை வகையாகக் காணப்படுகிறார்கள் என்று ஆராய்வோருக்கு, மனித வாழ்வையும் காதலையும் பற்றிச் சிந்திப்பவர்களுக்கு ஹார்டியின் நூல்கள் எத்தனையோ உண்மைகளைக் காட்டக் காத்திருக்கின்றன.

2

ஹார்டி 1840-ம் ஆண்டு பிறந்தார். 19-ம் நூற்றாண்டைச் சேர்ந்த பழைய நாவலாசிரியர்களின் பாணியிலேயே இவர் தம் நாவல்களை எழுதிச் சென்றாலும், மொழியாலும் நடையாலும் ஒருவாறு ஒப்புமை உடையரேனும் கதையாலும் கருத்தாலும் மற்றவர்களினின்று வேறுபட்டார். இவருடைய கதைகளில் துணிவான கற்பனைகள் இடம் பெற்றன. இதனால் அவற்றைக் கண்டு அஞ்சிய பலர் இவர் சமயத்தில் நம்பிக்கை இல்லாதவர் என்றும் கருதினர். செஸ்டர்டன் (Chesterton) என்பவர் ஹார்டியை 'சிற்றூர் நாஸ்திகன்' என அழைக்கிறார்.

தாமஸ் ஹார்டிக்குச் சிற்றூர் வாழ்வு பிடித்தமாக இருந்தது. சிற்றூர் மக்களின் உள்ளத்திலும், அழகிய இயற்கைச் சூழலிலும், ஹார்டி பெரிதும் ஈடுபட்டார். ஆரவாரமான நகரச் சூழ்நிலை அவரை ஈர்க்கவில்லை. சிற்றூர்ப்புறத்துக் கதை உறுப்பினர்களை இவர் காட்டும்போது இரக்க சிந்தனையோடு ஈடுபட்டுக் காட்டுகிறார். நாட்டுப்புறத்திற்கு எடுத்துக்காட்டாக வரும் கதைத் தலைவர்கள் ஒழுக்க வாதிகளாகவும், 'தர்மம் தலைகாக்கும்' என்ற தளராத நம்பிக்கை உடையவர்களாகவும் 'கருணைக் கடல்'களாகவும் இருக்கிறார்கள். நகர வாழ்விற்கு இலக்கியமாகத் தோன்றும் சார்ஜெண்ட் டிராய் ஆரவாரமாகவும், ஆடம்பரமாகவும், சூதாடியாகவும் திரிந்து, காணும் பெண்களையெல்லாம் கைக்குள் அடக்கவல்ல 'கல்யாண சுந்தர'மாக இருக்கிறான். இவர் தென்னிங்கிலாந்தில் (Bockhamton) பாக்ஹாம்டன் என்னும் இடத்தில் பிறந்தார். அந்தப் பகுதியனைத்திலும் வாழ்ந்த ஏழை எளிய பாமரர்களின் வாழ்வையும் உள்ளத்தையும் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தார். அது அவருடைய இலக்கிய ஆக்கத்திற்கு நல்லதொரு துணையாக நின்று அவர் நாவல்கள் அனைத்திலும் விரிந்து நிலைத்தது. இவரது நாவல்களில் விரித்துரைக்கப்பட்ட நிலப் பகுதிகளும் இயற்கை அழகுகளும தென் இங்கிலாந்துப் பகுதிகளே யாகும். இப்பகுதிகளைக் நிலைகளாகக் கொண்டு தோற்றம் பெறும் இவரது நாவல்கள் அனைத்தும் 'வெஸ்ஸெக்ஸ் நாவல்கள்' (Wessex Novels) என்ற வரிசையின் கீழ் வெளிவந்தன.


வெஸ்ஸெக்ஸ் பகுதியிடத்து இவருக்குள்ள பற்றுக் காரணமாகவே இவர் இறந்ததும் இவருடைய சாம்பலை வெஸ்ட்மினிஸ்டர் மடத்திலும், இவரது நெஞ்சத்தை வெஸ்ஸெக்ஸ் பகுதியிலும் இட்டனர்.

சிற்றூர் வாழ்வையே சித்தரித்தாலும், சிற்றூர்ப் புறஅழகுகளில் பெரிதும் ஈடுபட்டாலும், தன் வாழ்நாளில் பெரும் பகுதியைச் சிற்றூர்ப்புறத்திலேயே கழித்தாலும், உள்ளத்தாலும் உணர்வாலும் ஹார்டி 'சிற்றூர் நாஸ்திக'னாகவே வாழ்ந்தார். ஒரு நாட்டுப்புறத்தானின் உள்ளத்திற்கும் அவரது உள்ளத்திற்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை இருந்தது. அவரது உள்ளம் சுற்றி எழுந்து வீறிட்டடிக்கும் சுழற் காற்றை ஒக்கும். நம்பியதையே நம்பி, உண்டதையே உண்டு, ஓடிய தடத்திலே ஓடும் செக்கு மாடுகள் போல் வாழ்ந்து மூடக் கொள்கைகளையே சமயக் கோட்பாடுகளென நம்பி வாழ்ந்து கழிகிற சிற்றூர் மக்களினின்றும் அவர் தரத்தால் — சிந்தனையால் வேறுபட்டார்.

ஹார்டி இளமையில் ஒரு சிற்பியாக இருந்தார். சிற்பியாக வேலை செய்தபோது அவர் ஒரு பெரிய இலக்கிய மேதையாக வரக்கூடும் என்று கருதினாரில்லை. சிற்ப வேலைகளில் அவருக்கு நிறையப் பரிசுகள் கிடைத்தன. இந்த வேலை ஒழிந்த காலத்தில் ஆங்கில இலக்கியங்களைப் படித்தார். அவ்விலக்கியங்கள் இவரைப் பற்றி இழுத்துக் கொண்டன. தாமே கவிதை எழுத முற்பட்டார். முதன் முதல் கவிதைகளை எடுத்துக் கொண்டுதான் இலக்கிய உலகத்தில் அடியெடுத்து வைத்தார். அவருடைய திறமை நாவல் இலக்கியத்தில் மிளிரும் என்று அப்போது அவர் நினைத்ததில்லை. அவருடைய கவிதைகளைப் பத்திரிகை ஆசிரியர்கள் வழக்கம்போல் திருப்பி அனுப்பி விட்டனர். ஆவலோடு அனுப்புவார். பத்திரிகை அலுவலகத்தில் புகுந்து அவர் கவிதைகள் வெளி வந்தன என்பதுதான் மிச்சமாக இருந்தது. ஆசிரியர்கள் திருப்பி அனுப்பிச் சோர்வடைந்தார்களே தவிர ஹார்டி கவிதை எழுதிச் சோர்வுறவில்லை. அவருடைய தளரா முயற்சி அவரது திறமைக்கு விளக்கத்தைத் தேடிக் கொடுத்தது.

ஹார்டி 88 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து, 1928-ம் ஆண்டு இறந்தார். அவர் தம் 34-ம் ஆண்டில் எம்மா லவினு கிஃபோர்டு என்னும் அம்மையாரை மணந்து கொண்டார். 1912-ல் அவரது முதல் மனைவி இறந்து போனார். இரண்டாம் தாரமாக பிளாரன்ஸ் எமிலி டக்டேல் என்னும் மங்கையை மணந்துகொண்டார். அவ்வம்மையார் இவரது வாழ்க்கை வரலாற்றை இவர் இறந்தபின் எழுதி வெளியிட்டார்.

இவரது வாழ்க்கையில் வேறு குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகள் ஒன்றும் நடைபெறவில்லை.



இரண்டாம் அத்தியாயம்

சேகரனை விட்டுப் பிரிந்த சோமு அலுப்பும் சலிப்புமாக நடந்துகொண்டிருந்தான். ஆள் நடமாட்டமே யில்லாத வீதிகளில் அவன் நடந்து சென்றபோது என்னவோ போலிருந்தது அவனுக்கு. சத்தமும் சந்தடியுமாக இயங்கிக் கொண்டிருந்த உலகம் திடீரெனச் சலனமற்றுப் போனது அவனுக்குப் பிடிக்கவில்லை.

திடீரெனச் சேகரன் நினைவு தோன்றியதால் சிரித்தே விட்டான். எப்போதும் 'இயற்கை' 'எழில்' என்று எதையாவது பிதற்றிக் கொண்டே யிருக்கும் அந்தப் பித்தன்......! என்ன இருக்கிறது அந்த நிலாவில் என்று பார்க்க வானத்தைப் பார்த்தான். அந்த நிலா! வெண் மணற் பரப்பிலே விழுந்து கிடக்கும் மண்டை ஓடு! விழிகள் இருந்த குழிகள் தாம் அதில் கருமை படிந்துள்ள பாகங்கள்! வெறுப்பும் அருவருப்புமாக விழிகளைத் தாழ்த்தினான் உடனே.

வீதியோரத்து விளக்கின் வெளிச்சம் சோமுவின் விழிகளுக்கு ஏதோ ஒன்றைக் காட்டியது. என்ன என்று பார்த்தான். குப்புறக் கவிழ்ந்து கிடந்தது ஒரு பெண்ணுருவம்! கோதி முடிக்காத கூந்தலை ஊதி ஊசலாடச் செய்தது வீசுங் காற்று. கிட்ட நெருங்கிக் கூர்ந்து நோக்கினான். லேசாக உயர்ந்து தாழ்ந்த அவள் உடல் உயிர் இருக்கிறது என்பதை உணர்த்திற்று அவனுக்கு. துணிந்து தட்டியெழுப்பினான் அவளை.

ஏற்கனவே இதை எதிர்பார்த்திருந்ததைப் போல உடனே

அவள் எழுந்து நின்றாள். அயர்ந்து போனான் சோமு, அவள் அழகைப் பார்த்து. சிற்பி சிலையில் செலுத்தும் கடைசிக் கண்ணோட்டம்போல அடிமுதல் நுனிவரை விழிகளால் அளந்தான் அவளை.

தன்னை எழுப்பிவிட்டு ஏதும் பேசாமல் இருக்கும் அவனை, ஏமாளி எனத்தான் நினைத்தாள் அவள் முதலில். ஆனால் இரு விழிகளையும் தராசின் தட்டுகளாக்கி அவளை எடைபோடும் அவனுடைய அந்தச் செயல்....

“போலீசோன்னு பயந்து போனேன். இது.........பைத்தியம்!” என்று சொல்லிக் கொண்டே நகர்ந்தாள் அங்கிருந்து.

“நில்லம்மா. நீ யார்?”

“இதுவரையில் எவரும் என்னை எழுப்பி, யார் எந்த ஊர் என்று விசாரிப்பதில் நேரத்தை வீண்போக்கியதில்லை!”


கேள்விக்குறி மறைந்து கேலிச் சிரிப்பு பிறந்தது அவளிடமிருந்து. சோமு திகைத்துப் போனான். அவள் பேச்சில் காணப்பட்ட தெளிவு.........! எழுத்து வாசனையற்ற எவளோ ஒருத்தி என்ற எண்ணம் எங்கேயோ ஓடி ஒளிந்தது.

“இந்த அகாலத்திலே அனாதையாகக் கிடக்கிறாயே, அம்மா! அதனாலே ஏதாவது ஆபத்து......”

சொல் கிடைக்காததாலோ அல்லது கிடைத்த சொல்லைப் பயன்படுத்தும் துணிவு இல்லாததாலோ முடிக்காமல் நிறுத்தினான் சோமு.

“அந்த ஆபத்துத் தானே என்னை அனாதை யாக்கிற்று” என்று சொல்லிவிட்டு மலர் மொக்கைப் பார்ப்பதைப் போல அவள் இவனைப் பார்த்தாள்!

சோமுவின் எண்ணங்களில் அவன் எதிர்காலம் உருவானது. எழிலே உருவான அந்த எதிர்காலம்—இவள் உருவில் அது அவனை வந்தடையும் என்பதை அவன் எண்ணிப் பார்த்ததே



இல்லே! லேசாகத்தான் வாடி யிருந்தது அந்தக் கொடி. நீரும், நிலத்தில் வளமையும் மட்டும் கிடைத்து விட்டாலே போதும், பசுமை குவிந்து பலருடைய பார்வைக்கு விருந்தாக அமையும்! மட்ட ரகங்களுக் கெல்லாம் 'மார்க்கட்'டிலே மதிப்பிருக் கும்போது, மனதை உருக்கும் இந்த எழிலோவியத்துக்கு மட்டும்.........

"உண்மையாகவே கேட்கி றேன்—தெரிந்து கொள்ள. நீ யார்? எந்த ஊர்?" என்ருன் சோமு.



"விளக்கமாகவே சொல்லு கிறேன்—புரியும்படி. விலாச மிருந்தால் நான் ஏன் வீதியிலே கிடக்கிறேன்?"

"அப்படியானுல் என்னோடு வந்து விடு. உனக்கு ஒரு எதிர் காலத்தை உண்டாக்கித் தரு கிறேன்."

"ஏன்? வீட்டு வேலேக்கு வேறு ஆள்கிடைக்கவில்லேயா?" சொல்லும் போதும் சிரித்தாள்—சொல்லிவிட்டும் சிரித்தாள்.

"சீ! பைத்தியமே! அழகில் உருவமான உன்னேயா அடிமை வேலே செய்யச்சொல்லுவார்கள்? உலகை ஆட்டிவைக்கப் பிறந்த வள் அல்லவா நீ!" என்ருன் சோமு.

ஆச்சரியம் தாங் காது தடுமாறியே போனுள் அவள். இதுவரை அவளுக்கு ஒரு உடல்இருக்கிறது என்பதைத்தான் எல் லோருமே ஏற்றுக் கொண்டார்கள். ஆனுல்இப்போது...? உருவம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்ட மனிதனேப் பார்க்கிருள். திடீ ரெனத் தட்டியெழுப் பப்பட்ட அழ குணர்ச்சி அவள் இத யத்தில் அகங்காரத் தைப் புகுத்தியது. கொடுத்த பணத்துக் காக அவளேக் குரங் காக்கி ஆட்டிவைக்

கும் அந்த உலகத்திலிருந்து அவளுக்கு விடுதலை! உரிமை உணர்ச்சியால் அடிமையானுள் அவள், சோமுவின் வேண்டு கோளுக்கு!

"நடக்குமா இது?" என்ருன்

"ஏன் நடக்காது — நடத்தி வைக்க நானிருக்கும் போது. விலாசந் தெரியாததுகள் எத்தனையோ விண்ணிலே மின்னிக் கொண்டு தானிருக்கின்றன— விளம்பர பலத்தால்! மூலதனந் தானம்மா தேவைப்படுகிறது இந்த உலகத்தில் முன்னுக்கு வர!"

"என்னிடத்தில் பணம் இல்லையே!"

"அது பணமாகத்தான் இருக்கவேண்டும் என்பதுவும் இல்லையே! அறிவாக இருக்க லாம்—அழகாக இருக்கலாம்! ஆனல் உழைப்பாக மட்டும் இருக்கவே கூடாது!"

"ஏன்?"

"உழைப்பு ஒன்றுதானம்மா இந்த உலகத்திலேயே மலிவான



தும்பிகளுக்குத் தொல்லையே இருப்பதில்லை.

சரக்கு. போட்டியும் ஏராளமாக உண்டு அதற்கு. மூலதனம் உன்னிடம்—முயற்சி என்னிடம்! ஏழ்மையை எளிதில் முறி யடித்துவிட்டு இன்பக் கோட் டையைக் கைப்பற்றி விடலாம்! என்ன சொல்லுகிருய்?"

இன்ஷூரன்ஸ் ஏஜெண்டிடம் சிக்கிய ஏமாளியைப் போல ஆனுள் அவள். அவர்கள் இரு வரும் ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ளவில்லை—ஆனல் புரிந்து கொண்டார்கள்! அவன் நடந் தான்—அவள் தொடர்ந்தாள்.

"உன்னைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே!" என்ருன் சோமு.

"சொல்லி என்ன ஆகப் போகிறது? பெரிய இடத்தில் தான் பிறந்தேன். பத்தாவது வரை படித்தேன். ஆனல் பலன்...? பாழானது தான் மிச்சம்!"

அவளால் கூடக் கவலைப்பட முடியும் என்பதை அப்போது தான் தெரிந்து கொண்டான் சோமு.

"ஏன்?" என்ருன் மெது வாக.

"தும்பிகளுக்குத் தொல் லையே இருப்பதில்லை. தொடர் போடு முடிந்து விடுகிறது வேலை. மலர்தானே காய்த்துப் பழுக் கிறது—எல்லோருடைய பார்வைகளிலும் படும்படி! அத ஞல்தான்"

சோமுவால் அவள் பேச்சைப் புரிந்துகொள்ள முடியவில்லை. 'அல்லி அரசாணி மாலை' என்று

எடுக்க, அது 'அண்ணு' எழுதிய நூலாகக் காணப்பட்டால்...? விஷயத்தை வேறு பக்கம் திருப்பினுன்.

"உன் பெயர்?"

"தங்கம்!"

"மினுமினுப்பில்லையே கொஞ்சங்கூட—பெயரில்! தங்கம், வெள்ளி இதெல்லாம் பிடிப்பதில்லை உலகத்துக்கு. மலிவும் மன நெகிழ்வும் தரக்கூடிய மட்டரகங்களில் தான் அது மனதைச் செலுத்துகிறது. மெருகு—முலாம்— கலப்பு—இமிடேஷன்! இவைகள் தானம்மா அதன் இதயத்தைக் கவர்ந்து விடுகின்றன! 'மோகனு' என்று உன்பெயரை மாற்றி வைத்துக்கொள்."

ஜனசந்தடி யற்ற வீதிகளில் அவனேடு நடந்தபோது அவளுக்கு மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. இதுவரையில் அவளைப் பக்கத்தில் நடக்க விட்டு எவரும் அழைத்துப் போனதே இல்லை. பயந்து பதுங்கி வாழ்ந்த அந்த முறை முறியப் போகிறது! தினம் தினம் அவளைத் தேடியே வரும் அந்த இரைகள்...! காறித் துப்பினுள் உடனே, அந்த நினைவுவந்த போது!

"யார் கேட்டாலும் உண்மையைச் சொல்லிவிடாதே" என்று எச்சரித்தான் சோமு எதையோ நினைத்துக்கொண்டு.

"பொய்தான் பேசக்கூடாது என்பார்கள்" என்ருள் குறும்பாக!

"பைத்தியமே! பிறர் குறைகளைக் கொண்டு சூதாடி வெற்றி



அவன் நடந்தான் அவள் தொடர்ந்தாள்.

பெற நினைக்கும் உலகம் இது! அறிவாளி என்று ஒருவனை மதிக்கும் பெருந்தன்மைதோன்ருது. அவன் பிறந்த ஜாதி எது என்று கண்டுபிடித்துத் தூற்றுவார்கள். ஆற்றல் மிக்கவனைப் போற்றமாட்டார்கள். அவன் எங்கே வழுக்கி விழுந்தான் என்பதையே கவனிப்பார்கள். உன்னைப் பற்றிய வரலாறு மட்டும் தெரிந்தால் உன் அழகைப்பற்றி மறந்தே போவார்கள். மட்டரகங்களின்மத்தியில் மதிப்போடு உலாவ வேண்டுமானல்........ மோகனு!......எதையாவது மறைத்துவைத்தால் தான் அது முடிகிறது!"

"உங்கள் மாமன் மகள் என்று உண்மையைச் சொல்லட்டுமா?"

"அதையே தான் நானும் நினைத்தேன்! எப்படி உனக்கு அது...?"

"இது என்ன பிரமாதம்? அக்காள் தங்கைகளாக இருப்பவர்



இருவிழிகளையும் தராசின் தட்டுகளாக்கி ......

களை விட இவர்கள் மேல் தான் ஆண்களுக்கு எப்போதுமே அக்கறை இருக்கும்!"

சிரிப்பு வெளிப்பட்டுச் சிதறியது அவளிடமிருந்து. நீண்டு நிம்மதியாகப் படுத்திருந்தது அந்தப்பாதை. தூசி படியாமல் துடைத்துச் சுத்தப்படுத்தியது வீசுங் காற்று. ஆடிக்கொண்டிருந்த மரக்கிளைகள் ஆனந்தச் சிந்து பாடின. நிலவு தன் ஒளியால் வழிகாட்டியது அவர்களுக்கு. இருவரும் நடந்துகொண்டே இருந்தனர். கோட்டான்கள் கூவின. வீதியில் படுத்திருந்த நாய்கள் குரைத்தன. வீட்டுத் திண்ணைகளில் உறங்கிக்கொண்டிருந்த மனிதர்கள் குறட்டை ஓசைகளை எழுப்பிப் பயமுறுத்தினர். ஆனாலும் போய்க்கொண்டேதான் இருந்தார்கள் இருவரும்! நல்வாழ்வா? அல்லது நாசமா? எண்ணத்துக்குப் புலப்படாத அந்த எதிர்காலம் எங்கோயிருந்து அவர்களைக் கூவி அழைத்துக்கொண்டிருந்தது!

காதல் நினைவுகள்

பெரி. சிவனடியான்

கட்டுக்கோப் பானஉடல்
காதல் மொழியும்விழி
தொட்டாற் சுருங்குமிதழ்
தொல்லை தரும்கன்னம்
மொட்டு மலர்மூக்கு
மோக மறியாத
தொட்டில் குழந்தையுளம்
தோன்றும் மதிமுகமே.

செல்லக் கிளிப்பேச்சுச்
சேவலின் கொண்டைநிறம்
சொல்லோ செந்தமிழ்நூல்
சுருட்டை முடிமேகம்
முல்லை மலர்ப்பற்கள்
முறுவல் உயிர்க்கொல்லைஞன்
கொல்லி மலைத்தென்றல்
கோதை நடக்கும்நடை.

இந்த இலக்கணத்தை
ஏற்கும் தமிழணங்கு
வந்து நதிக்கரையில்
மணலிற் தனியாவாள்
அந்த மணித்துளியில்
அடைவேன் நதிக்கரையை
சொந்தப் பதுமையெனத்
தோளைப் பிடித்தழைப்பேன்.

அழைப்பை விரும்பாள்போல்
அணங்கு தலைகவிழ்வாள்
பழமைக் குணமுனையும்
பாக்கி விடவில்லையா?
அழகே! மறுவுரைசொல்
அன்பே! சிரியென்பேன்
மழலை மொழியுடனே
மலரும் சிரிப்பங்கே.

பேச்சின் இடையிடையே
பெண்மைக் குணமான
கூச்சம் முகங்காட்டும்;
கூட, அவள்கண்ணின்
வீச்சும் கலந்திருக்கும்
வெம்பு முளத்தால்நான்
காச்சும் இரும்பாகிக்
கலையை நெருங்கிடுவேன்.

சின்ன மலரிரண்டு
சேரும் அழகினைப்போல்
ஒன்றும் முகமிரண்டும்;
உயிர்கள் தொடர்புபெறும்
தென்றல் நடுநடுங்கித்
திணற இருவரிடைக்
குன்று மலைத்தோளில்
குமரி சரமாவாள்.



தமிழ் விருந்து

"தமிழ்த்தும்பி"

8. கொடுத்துவைத்த தலைவன்

தேன் மணக்கும் தென்றலின் இன்பத்திலே திளைத்திருந்தான் தலைவன். இப்படிப்பட்ட இளந் தென்றலில்தான் அவன் தலைவியை முதன் முதலாகச் சந்தித்தது. தென்றல்போல் மெல்லென்று அசைந்து நடந்த அவள் அவன் உள்ளத்திலே பெரும் புயலைக் (காதலைத்தான்) கிளப்பிவிட்டாள். காலக் கண்ணாடியிலே அவன் கடந்தகால வாழ்க்கையின் நிகழ்ச்சிகளைக் கண்டான். தான் அவளைக் கண்டது, காதல் கொண்டது, தோழியின் உதவியால் களவு இன்பம் நுகர்ந்தது, உடன் போக்கை மேற்கொள்ள முற்பட்டுப் பின் கடிமணம் புரிந்து கொண்டது எல்லாம் வாழ்வுக் கதையின் இன்ப அத்தியாயங்களாகத் தெரிந்தன. அதன்பின் ஏன்தான் அவன் மனம் சபலத்தை மேற்கொண்டதோ? எங்கோ கண்ட பரத்தையின் அழகு அவன் இல்லற இன்பத்தைக் கெடுத்தது. தலைவியைப் பிரிவுத் தீயில் பொசுக்கி, அவன் காமக் குளத்தில் குதித்தான். மயக்கம் கலந்த வெறி அகன்றபின், காமபோதை தெவிட்டியபோது அவன் தலைவியின் உள்ளன்பையும் உண்மையன்பையும் நினைந்து பெருமூச்சு விட்டது, தன்னை ஏற்கும்படி பாணன் மூலம் வாயில் வேண்டி நின்றது ஆகியவை கலக்கம் தரும் வேதனை அத்தியாயங்களாக அமைந்தன. தலைவியின் தாராள மனப்பான்மை, மனிதத் தன்மை, கருணை, இரக்கம் இவை அவனைப் பழைய நிலையில் தலைவியிடம் சேர்ப்பித்தன.

சிந்தனை தலைவனை ஆழ்த்திக் கொண்டிருக்கும் போது தோழி அவ்வழியே வந்தாள். ஒருவேளை தலைவியைக் காணச் செல்லுகிறாளோ, என்னவோ? எவ்வளவு அருமையான, அறிவு நிறைந்த தோழி? இவள், தன் காதல் நாடகத்தில் எவ்வளவு முக்கிய அங்கத்தை ஏற்கிறாள்? என்னதான் தலைவனுக்குத் தோன்றிற்றோ அவன் தோழியை அழைத்தான். தோழியும் இளமுறுவலோடு தலைவன் அழைத்த இடத்துக்கு வந்தாள்.

"தோழி! உண்மையைச் சொல். தலைவிக்கு என்மீது அடக்க முடியா, ஆனால் வெளியிட வகையில்லாக் கோபம் தானே?"

"ஏன் அப்படித் திடீ ரென்றுகேட்கிறீர்கள்?" என்று திருப்பிக் கேட் டாள் தோழி.

"இல்லை. தலைவி வெறுப்புக் கலவா அன்பை என்மீதுபொழி கிருளா என்பதை அறிய ஆசை!" என்ருன் தலை வன்.

"பெண்ணினத்தின் மேல் எப்போதும் இந்த ஆண்களுக்கு ஐயம் போலும்!"

"அப்படி யொன்று மில்லை. ஆனல்......"

"பின் ஏன் இக் கேள்வி உங்கள் உள்ளத் தில் எழுகிறது?"



"இல்லை, நான் தலைவியை மறந்து வெட்கங்கெட்ட வாழ்வு நடத்தினேன் அல்லவா? அது என்னை உறுத்திற்று. என்னையே எனக்குப் பிடிக்கவில்லை. இவ்வளவு கேடு கெட்டவனு என்று என்னையே நான் வெறுக்கிறேன். தலைவியும் அப் படி ஏதாவது உள்ளத்து அடித்தளத்தில் நினைக்கிருளோ என்று அறிய ஆசைப்பட்டேன். அவ்வளவுதான்!"

"அடேயப்பா, பரத்தையர் குழாத்தைநாடிய உங்களை நினைத் தால் கூட எனக்குப் பற்றி எரிகிறது! எப்படித்தான் புறத் தொழுக்கத்தை விரும்பி ஏற்றீர் களோ— உங்களை அப்படியே கசக்கிப் பிழிந்து வஞ்சம் தீர்க்க வேண்டும் என நான் விரும்பினேன். நீங்கள் வாயில் வேண்டி அனுப்பின பாண னிடம் கூட என் வயிற்றெரிச் சலைக் கொட்டிக்கொண்டேன்!" என்று கொஞ்சம் கோபமாகவே சொன்னுள் தோழி.

"அப்போது நான் எதிர்ப்பட் டிருந்தால் என்ன செய்திருப் பாய்?" என்று இளஞ்சிரிப் போடு கேட்டான் திருந்தி விட்ட தலைவன்.

"என் தலைவி அனுபவித்த துயரால் என் மனம் கல்லாகி விட்டிருந்தது. உங்களை ஒருக் கால் கொன்ருலும் கொன்றி ருப்பேன்!" என ஆவேசமாக மொழிந்தாள் தோழி.



தாள். உங்களுக்குப் பெருமை தரும் அத்தனையும் சொன்னாள். புறத்தொழுக்கத்துப் பரத்தையர் உறவை மட்டும் சொல்லவில்லை! உங்கள் மேலிருந்த என் சினத் தீ தலைவி மீது ஆத்திரச் சுடராகப் பரிணமித்தது. நான் உங்கள் கெட்ட செய்கைகளை உரக்க எடுத்துக் கூவினேன்! அவள் அதைக் கேட்கக்கூட இல்லை."

"ஆஹா, என் நல்வினையே நல்வினை!"

"பாணன் யாழ் கூட்டி உங்கள் பெருமை பாடினான். அவன் பரிசுக்காகப் பாடுபவன் தானே! இவள் உங்கள் மீது தன் அன்பு பரவ உள்ளத்தை வெளியிட்டாள். நிகழ்காலத்து வேண்டாத உங்கள் பரத்தையர் உறவையே நினைக்கவில்லை. பாணன் அறியக் கூடாத களவுக்கால இன்பச் சிறப்பை இவள் பாடினாள். யாழ் இசையினும் இனிய தன் குரலிசையால்.உங்கள் இயல்பை இனிமையுற எடுத்துக் கூறினாள்."

'அது சரி, பாணன் உன்னிடம்என்னென்ன பாடுபட்டானோ?'

"முள்ளை முள்ளால் எடுப்பது போலக் கொடுமையைக் கொடுமையால் உணரச்செய் என்று சொல்லி, தலைவி உங்களை ஏற்க முடியாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். உங்களையும் உங்கள் நடவடிக்கைகளையும் மிருக உலகம் ஒப்புமே தவிர நாகரிக மனிதப் பண்பாடு ஒப்பாது...இன்னும் என்னவெல்லாமோ சீறிப் பொங்கினேன்" என்று வார்த்தைகளை வீசினாள் தோழி.

"அது சரி, தலைவி என்ன சொன்னாள்?"

"உங்கள் புகழ் இசைத்தாள். உங்கள் குண இயல்பைப் புகழ்ந்

"அடாடா, எவ்வளவு பேறு பெற்றவன் நான்!" என்று தன்னைத் தானே பாராட்டிக் கொண்டான் தலைவன்.

தோழி தலைவனிடமிருந்து விடை பெற்றுக்கொண்டாள். தலைவியின் உயர்வைத் தலைவன் நினைந்து மேலும் மேலும் உருகினான். அவளைப் போல் பெண்ணைப் பெற்ற ஊரே சிறப்பு மிக்கது என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அவள் ஊர் நிகழ்ச்சி ஒன்று அவன் கண்முன் உலவிற்று.

அழகான ஆற்றங்கரை. அங்கே வந்து பல் வகை ஆட்டங்கள் ஆடிக்கொண்டிருந்தனர் புனையப்பட்ட ஓவியங்கள் போன்ற அழகு மங்கையர். அவர்களுக்கு ஆற்றில் குளிக்க ஆசை ஏற்படுகிறது. தாமணிந்துள்ள ஆபரணங்களைக் கழற்றி ஆற்று மணலில் வைத்துச் செல்கின்றனர். புனல் விளையாட்டுக்களில் தம்மை மறக்கும் அவர்களுக்கு நேரம் போவதே தெரிவதில்லை.

மிருதுவாகக் காற்று தவழ்கிறது. சிறு சிறு மணல் தூள்கள் காற்றில் பறக்கின்றன. அவர்கள் கண்ணுக்குள்ளும் மணல்தூள் சென்று அவர்களை வருத்துகிறது. ஆனால் ஆட்ட இன்பத்தில் அவர்களுக்கு அது பெரிதாகப் படுவதில்லை. தொடர்ந்து அடிக்கும் இளங் காற்றால் அங்கங்கு சின்னஞ் சிறு மணல் மேடுகள் உண்டாகின்றன. அழகிகள் ஆற்று மணலில் இட்ட இழைகள் கூட மணல் மேடால் மறைக்கப் படுகிறது; அதாவது கழற்றி வைத்த இடத்தைச் சுற்றி மணல் மேடு தட்டுகிறது.

எங்கோ மேய்ந்துவிட்டு நீராருந்தப் பெண்கள் நீராடும் அவ்வாற்றங்கரைக்குச் சில எருமைகள் வருகின்றன. குளம்புகளாலும், கொம்புகளாலும் மணல் வெளியைத் துழவிக் கொண்டே அவை வருகின்றன. அவை அப்படிச் செய்வதால் காற்றடித்து மணல் மேடு தட்டி மறைந்த ஆபரணங்கள் மணலை விட்டு வெளிப்படுகின்றன. இழைகள் மறுபடி மணல் பின்னணியில் மின்னுகின்றன......

களவுக்காலத்து தலைவன் தலைவிக்குச் செய்த நன்மைகள் அவள் உள்ளத்தே மறைப்புண்டிருந்தன, காற்றால் ஆபரண வகைகள் மணலில் மறைந்தது போல. தன் புறத்தொழுக்கம் களவுகால இன்பங்களை வெளிப்படுத்திற்று, எருமை தம் குளம்பாலும், கொம்பாலும் இழைகளை மணலினின்று எடுத்தது போல. 'களவுக்கால இன்பச் செய்தியைத் தலைவி எடுத்து மொழிந்தாள்' என்று தோழி தலைவனிடம் சொன்னது, இப்படியெல்லாம் நாட்டுக் காட்சியைத் தன் புறத்தொழுக்கத்தோடு தோழி தொடர்புபடுத்துவது போல என்று தலைவன் தனக்குள் நினைத்துக் கொண்டான். இவ்வாறெல்லாம் எண்ணித் தலைவன் தலைவியின் உயர்வையும் தன் சிறுமையையும் ஒப்பிட்டுக் கொண்டான். மொத்தத்தில் அவளால் தன் வாழ்வு வளம்பெற்றது என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

தலைவன் பரத்தையரிடம் இருந்த போது தலைவி எப்படி நடந்துகொண்டாள், தான் வாயிலை மறுக்கும் போது எப்படி அவள் தன்னை மறுத்து வாயில் நேர்வித்தாள் — அதாவது தலைவன் கழிவிரக்கத்தை ஏற்றுக்கொண்டாள் — எப்படித் தலைவன் குணங்களை மெச்சினாள், தீச் செய்கையைத் தவிர்த்தாள் என்று தோழி தலைவனிடம் சொல்லுவதாக ஓரம்போகியார் அமைத்துள்ள இப்பாடல் சுவைமிக்கது. தலைவியின் உயர்வு, தலைவனின் சிறுமை, தோழியின் சிற்றம் ஆகியவற்றை நீங்களும் அப்பாடலில் காணலாம். எருமை நிகழ்ச்சி உவமானமும் மிகச் சிறந்தது என்பதையும் நீங்கள் உணரலாம்.

புனலாடு மகளி
ரிட்ட வொள்ளிழை
மணலாடு சிமையத்
தெருமை கிளைக்கும்
யாண ரூரன்
மக ளிவள்
பாணர் நரம்பினு
மின் கிளவியளே.

—ஐங்குறுநூறு

[சிமையம் — மேடு, கிளவியள் — பேச்சை யுடையவள்]

பலே கிட்டு!

டி. ஜே. இனபராஜ




கிட்டுவின் மாமா பட்டணத்திலிருந்து வந்திருந்தார். கிட்டுவுக்கும் அவன் தங்கை ராஜத்திற்கும் ஒரே ஆனந்தம்! "மாமா, மாமா" என்று சொல்லிக்கொண்டு அவரை வளைய வளைய வந்தார்கள்.

கிட்டுவின் மாமா அடிக்கடி அவர்களுடைய வீட்டிற்கு வருவதில்லை. அவர் ஒரு அரசாங்க உத்தியோகஸ்தர். வருடத்திற்கு ஒருமுறை விடுமுறை கிடைக்கும் பொழுதுதான் வருவார்.

அவர் வந்துவிட்டால் கிட்டுவுக்கு நிலைகொள்ளாது. ஏனென்றால் மாமா வேடிக்கையாகப் பேசுவார். சிரிக்கச் சிரிக்கக் கதை சொல்லுவார்.

இரவில் கிட்டு அவருடன் படுத்துக்கொள்ளுவான். அவன் தூங்கும்வரை அவர் அழகான கதைகள் சொல்லுவார். மறுநாள் கிட்டு பள்ளிக்கூடத்தில் தன் நண்பர்களுக்கு அந்தக் கதைகளைச் சொல்லுவான். அவர்களிடம் மாமாவைப்பற்றிப் பெருமை அடித்துக்கொள்ளுவான்!




கிட்டுவின் மாமா ஊருக்குச் செல்லவேண்டிய நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. கிட்டுவிற்கு வருத்தமாக இருந்தது. கடைசியில் அந்தக் கடைசி நாளும் வந்துவிட்டது.

அன்றிரவு பன்னிரண்டு மணி வரையில் கிட்டு தூங்கவில்லை. மாமாவிடம் கதை

கேட்டுக் கொண் டிருந்தான்.

பொழுது விடிந்தது. மாமா ஊருக்குப் புறப் பட்டு விட்டார். அவர் கிட்டுவை யும் ராஜத்தை யும் கூப்பிட்டு ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத் தார். கிட்டுவிடம் "உனக்கு லீவு விட்டவுடன் பட்டணத்திற்கு வந்துவிடு. நிறைய கதைகள் சொல்லுகி றேன்" என்றார். கிட்டு தலையாட் டினான்.



கிட்டு மாமா கொடுத்த ஒரு ரூபாய்க்குச் சில்லறை மாற்றிக் கொண்டான். நேரே கடைத் தெருவிற்கு அவன் ஓடினான்.

"சர்க்கரைப் பூந்தி! நெய்யில் செய்த பூந்தி! நேரமானால் கிடைக்காது!" என்று ஒரு மிட்டாய்க்காரன் கடைத் தெருவில் கத்திக் கொண்டிருந்தான். கிட்டு அங்கு சென்றான்.

"ஒரு சேர் பூந்தி எட்டணா. காசை எடுத்து வாங்குங்கள்" என்றான் மிட்டாய்க்காரன், அங்கு கூடியிருந்த ஜனங்கள் கலைய ஆரம்பித்தனர்.

"எனக்கு ஒரு சேர் பூந்தி கொடு" என்றான் கிட்டு. மிட் டாய்க்காரன் பூந்தியைத் தராசில் நிறுத்தான். அவன் தன் கைவிர லைப் பூந்தியுள்ள தராசுத் தட்டில் வைத்து அழுத்தினான். அத னால் நிறை குறைவாயிருந்தும் அந்தத் தட்டுக் கீழே சென்றது.

கிட்டு அதைப் பார்த்துவிட்டான். "ஏன் இப்படி மோசம் செய்கிறாய்? நீ சரியாக நிறுக்கவில்லையே!" என்றான் கிட்டு.

மிட்டாய்க்காரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இருந்தாலும் அவன் சமாளித்துக்கொண்டான். "தம்பி, குறைவாக இருந்தால்தான் நீ தூக்கிக்கொண்டு போவதற்குச் சுலபமாயிருக்கும்" என்று சொல்லிச் சிரித்தான்.

கிட்டு ஒன்றும் பேசவில்லை. பூந்திப் பொட்டலத்தைப் பெற்றுக்கொண்டான். பையிலிருந்து ஆறு அணுக்களை எடுத்து மிட்டாய்க்காரனிடம் கொடுத்தான்.

"என்ன இது! பணம் குறைவாக இருக்கிறது?" என்று மிட்டாய்க்காரன் ஆச்சரியத்துடன் கேட்டான்.

"பணம் குறைவாக இருந்தால் எண்ணுவதற்குச் சுலபமாயிருக்கும்" என்றான் கிட்டு. மிட்டாய்க்காரன் முகத்தில் ஈயாடவில்லை. கிட்டு குதித்துக்கொண்டே வீட்டிற்குச் சென்றான்.

வாயாடிகள்

நா. பாண்டுரங்கன்

காலம் பலருக்கு மாடாக இருப்பதால் அதனை அதட்டி ஓட்ட வேண்டியிருக்கிறது. சிலருக்கு அது மானாக இருப்பதால் சிரித்துப் பிடித்து அதன் ஓட்டத்தை நிறுத்தவேண்டியிருக்கிறது. இது வரை மானாக இருந்துவந்த காலம், இப்போது திடீரென மாடாக மாறிச் சீமான் சிவகிரியைத் திடுக்கிட வைத்துத் திகைப்படையச் செய்தது; சுற்றி வரும் செக்கு மாடாகக்கூட அல்ல, வண்டியில் போகும் போதே வழியில் படுத்துக்கொள்ளும் சண்டிமாடாகிவிட்டது அது! வீட்டுக்கே திரும்பாமல் வெளியூர்களில் இருக்கும் போதே அவருக்கு மாதத்தின் பல நாட்கள் கரைந்து மறையும். அப்படி இருந்த அவர் இப்போது வீட்டை விட்டு அல்ல, படுக்கையை விட்டே கிளம்ப முடியாமல் விழுந்துவிட்டார். ஏறி உட்கார்ந்து மெத்தையில் சாய்ந்துகொண்டதும், தூரத்தையும் நேரத்தையும் மிரட்டிச் செல்லும் அவருடைய 'செவர்லே' டாக்டர் வீட்டுக்கும் மருந்துக் கடைக்கும்தான் கடந்த மூன்று மாதங்களாக அவர் இல்லாமல் அவருக்காகப் போய்க்கொண்டிருந்தது.

ஒருநாள் சிவகிரி மாடியிலிருந்து இறங்கிக் கீழே கூடத்தில்வந்துகொண்டிருக்கும்போது திடீரெனக் கால்கள் மேலே நகராமல் நின்று அவரைக் கீழே தள்ளிவிட்டன. 'பிடிப்பு' என்றார்கள். 'வாதம்' என்றார்கள். 'இரத்தக்குறைவு' என்றார்கள். இதன் முடிவு உடலிலும் உள்ளத்திலும் கடுமையான ஜுரம் மூண்டது தான்! நோய்மீது பாய்ந்த அவர் கோபம் அது நீங்கவேண்டுமே என்ற நினைப்பால் இரக்கமாகியது! நிலைமை வர வர மோசமாகிக்கொண்டு வருவதைக் கண்டதும் நோய்பற்றிய எண்ணமே மறைந்துபோய் உயிர் உடலில் தங்காமல் போய்விடுமோ என்ற பயம் அவரைப் பற்றிக்கொண்டது. அதனால் 'அந்த உலக' அச்சம் அவர் நினைவில் புகுந்துகொண்டது. ஆகவே அவர் நினைவு அதுவரை நடத்தி முடித்த தன் வாழ்க்கை நாடகக் காட்சிகளை மன அரங்கில் போட்டுப் பார்த்தது.

★


ஊரில் உள்ள சிலர் தனித்தனியே எவரிடமும் சொல்லாமல் பாதுகாப்பிற்காக இவரிடம் கொடுத்துவிட்டு அவர்களில் சிலர் எவரிடமும் சொல்லாமல் இறந்துவிட்டதும், இவரும் அதைப்பற்றி எவரிடமும் சொல்லாமல் தன்னிடமே வைத்துக் கொண்டதாகிய சில ஆயிர ரூபாய்கள்—எவருக்குந் தெரிந்து இவர் வீட்டில் வேலைக்காரிகளாக வந்தவர்கள் எவருக்குந் தெரியாமல் இவருக்கு மனைவிகளாக்கப் பட்டது — இவர் கருத்தைப்

பிடித்த அழகிய அபலைகள் இவர் காதத்தைப்·பிடிக்க மறுத்ததும் அவர்கள் குடியிருக்கும் குடிசைகளில் நெருப்பைக் குடியேற்றியது—அறியாமை இயலாமை இவைகளால் இவரிடம் சில சமயம் தவறி நடக்கும் வேலைக்காரர்கள்......செத்துப் போன மாட்டின் தோலாலான சவுக்கால், உயிருடன் இருக்கும் அந்த மனிதர்களின் தோல் பிய்ந்து இரத்தம் ஒழுகும்படி அடித்தது—அழகையும் கலையையும் உயிருக்காகப் பணத்திடம் அடகு வைக்கும் அந்த எளியவர்களிடம் தன் உள்ளத்தையும் உடலையும் தன் வெறியைத் தீர்த்துக்கொள்ள அடிக்கடி அடகு வைத்தது...தன் மன அரங்கில் நினைவு போட்டுப் பார்த்த ஒவ்வொரு காட்சியும் அவர் கண்ணை மூடி நிறுத்தியதும் கருத்தில் புகுந்து குடைந்தது. இதயச் சோலையில் புயலைக் கிளப்பிப் பூத்துக் குலுங்கிய செடிகளையெல்லாம் பிடுங்கிப் பிய்த்தது; மரங்களையெல்லாம் வேரோடு பறித்து எறிந்தது; மார்பில், கூராகத் தீட்டிய அகலமான ஈட்டியை நேராகச் செலுத்தி ஆழமாகப் பாய்ச்சியது!...

தன் ஆனந்தத்திற்காக, தான் செய்து முடித்த எல்லாமே அதருமங்களாகத்தான் தெரிந்தன அவருக்கு! செய்த எல்லாவற்றிலும் நல்லது எதுவுமே இல்லையா? தருமமே எதிலும் கிடையாதா? அழுகைக் குழியில் தடுக்கி விழ இருந்த அவர் மனம் தப்பி ஆச்சரியத்தால் அப்படியே நிலைத்து நின்றது. 'எடுத்தேன் முடித்தேன்' என்றுதான் இவர் செயல் ஒவ்வொன்றும் இருந்த போதிலும் அந்த எடுப்பிற்கும் முடிப்பிற்கும் இடையில் ஒரு போர் இருக்கத்தான் செய்தது. போரில் இவர் பக்கமே எப்போதும் வெற்றி! உள்ளம்—உணர்ச்சி—சில சமயம் உயிருள்ள மனித உடல்கள்—இவர்கள்தாம் எதிரிகள். வெற்றி இவருக்கு என்றால் தோல்வி அவர்களுக்கு என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. தருமம்தானே வெல்லும்? அதர்மம் எங்காவது வெல்லுமா? 'சத்தியமே ஜயம்!' அல்லவா? தான் எடுத்ததில் எல்லாம் வெற்றி—எனவே, தான் எடுத்துச் செய்து முடித்ததெல்லாம்...அண்டங்காக்கை வெள்ளைப் புறா ஆகிவிட்டதுபோலக் கருத்து இருண்ட அவருடைய மனவானம் திடீரென வெளுத்துச் சிரித்தது!

★

ஒருநாள் கண்களைத் திறந்து அவர் சுற்றுமுற்றும் பார்த்தார். அவருடைய இமைகளின் படபடப்பு பறக்கும் கிளியின் இறக்கைகளை நினைவுக்குக் கொண்டு வந்தது. விசித்திரமான மனிதர்கள்—விநோதமான அலங்காரம்—விந்தையான இடம்! உண்மையை நொடிப்போதுக்குள் யூகம் அவருக்கு உணர்த்தியது. ஆம்! தேவலோக நீதி மன்றம்! ரவிவர்மா படத்தில் இருந்த ரம்பை மேனகை ஊர்வசி திலோத்தமை



நால்வரும் எழுந்துவந்து அங்கே அமர்ந்திருந்தனர். தீர்ப்பைக் கேட்க என்றுமில்லாமல் அவர்கள் அன்று வந்திருக்கிறார்கள். அதனால்தான், அங்கே மன்றத்தில் அளவை மீறிய தேவர்கள் கூட்டம்! காலம் இரவாக இருந்ததால் நட்சத்திரங்கள் மின்சார விளக்குகளாகத் தொங்கின. மின்னல் கொடிகள் சில, குழாய் விளக்குகளாகப் பிரகாசித்தன. இவைகளுக்கு நடுவில் வட்ட நிலா பெரிய உருண்டை விளக்காக ஒளியைக் கொட்டிக்கொண்டிருந்தது. வாத்ய கோஷ்டிகள் திடீரெனக் கிளம்பி ஒலித்து அடித்து மறைந்தன. இரண்டு கிங்கரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிவகிரிக்கு எதிரில் ஓர் ஆளைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். கண்களோடு கண்கள் மோதின. மனத்தை விட்டே மறைந்து போயிருந்த ஒரு நிகழ்ச்சி இப்போது உதித்து அவர் இதயத்தையே உலுக்கியது. ஆமாம் எதிரே நிற்பவன் அவனேதான்—வேலைக்கார ஏகாம்பரமேதான்...

...உழைப்பிற்கும் விழிப்பிற்கும் உயிராகியிருந்த கதிரவனை வானம் எப்போதோ உருட்டி எங்கேயோ தள்ளி மறைத்துவிட்டது. உலகத்தை மறதி—மகிழ்ச்சி—மருட்சி இவைகளில் இழுத்து நிறுத்திக்கொண்டிருந்தது நடுவானை அடைந்து கொண்டிருந்த நிலா! வெந்நீரில் பன்னீரை ஊற்றி குளித்துவிட்டு

இதமாகச் சமைத்திருந்த அறுசுவை உணவை மிதமாகச் சாப்பிட்டு முடித்துவிட்டு மின்சார விசிறியைத் தட்டிச் சுழல விட்டுவிட்டு, மெத்தை விரித்த கட்டிலில் உட்கார்ந்து சாய்ந்து கால்களை நீட்டிப் படுத்திருக்கிறார் சிவகிரி! அப்பொழுதுதான் ஆறு நாட்களைச் சேர்ந்தாற்போல் மனதூர் மல்லிகா வீட்டில் கழித்த பிறகு ஊர் திரும்பியிருக்கிறார். சோர்வும் அயர்வும் அவர் உடல் முழுதும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தன. வழக்கம்போல் அதை அடக்கி நிறுத்த வேலைக்கார ஏகாம்பரம் கட்டிலில் பயபக்தியுடன் உட்கார்ந்து, அவர் கை நடுவிரல் நுனியிலிருந்து கால் கட்டைவிரல் நுனிவரையில் உள்ள சதையைத் தன் கைவிரலால் பிடித்து விட்டுக்கொண்டிருக்கிறன். மூடி நிலைத்துவிட்ட இமைகள் இயங்கும் அவர் எண்ணங்களைத் தேக்கி நிறுத்திவிட்டுத் தூக்கத்தை விதைத்துக் கொண்டிருந்தன. அவர் தோளைப் பிடித்து அமுக்கிக்கொண்டிருந்தபடியே இருந்த ஏகாம்பரத்தைப் படையெடுத்த தூக்கமும் கடைவிரித்த கனவும் அவர் மீதே பிடித்துத் தள்ளின. துள்ளி எழுந்த அவரும் திடுக்கிட்டு விழித்த இவனும்! 'என்னடா தூக்கம்!'— அவர் ஆத்திரம் இந்த வினவாக வந்தது. 'சரிதான். நிறுத்துடா!'' — கனவில் வந்திருந்த எதிரிக்கு நினைவால் சொல்ல விரும்பிய பதிலை அப்படிச் செய்வதாகவே நினைத்துக்கொண்டு அவன் அவருக்கு எதிரே நாவால் சொல்லிவிட்டான். தன் பலத்தையெல்லாம் மடக்கிய காலில் அடக்கி நிறுத்தி ஓங்கி அவர் விட்ட உதை!— ஏகாம்பரம் கட்டிலிலிருந்து சுருண்டு தரையில் விழுந்ததுமே அவன் உயிர் உருண்டு காற்றில் மறைந்தது!...

சித்திரபுத்திரன் விரித்து வைத்திருந்த நோட்டுப் புத்தகத்திலிருந்த எழுத்துக்கள் ஒலியுருவம் பெற்று ஓலமிட்டன.

"சிவகிரி இன்று வந்துவிட்டதால் அவனுடன் சம்பந்தப்பட்ட ஏகாம்பரத்தின் தீர்ப்பு இன்று எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஏகாம்பரம் முன் ஜன்மத்தில் எல்லா ஐஸ்வர்யங்களும் நிறைந்த பிரபுவாகப் படைக்கப்பட்டிருந்தான். கதறிய படி ஏழைகள் இவனிடம் கருணை நாடி வந்தால் காலால் எட்டி உதைத்து அவர்களை உருட்டித் தள்ளுவது இவனுக்குக் கோலாகலம் தரும் விளையாட்டு. அந்தப் பாபத்தை அவன் அநுபவிக்க அடுத்த ஜன்மத்தில் வேலைக்காரனுகக் கஷ்டப்பட்டு எட்டி உதைக்கப்பட்டு உயிர் விடும்படி படைக்கப்பட்டான்; உதைபட்டு உயிர்விட்டான்!''

சித்திரபுத்திரன் படித்து முடித்துவிட்டு நிமிர்ந்தார்.

காலதேவன் (மறு பெயர் — நீதிதேவன்) தீர்ப்பு வழங்கினர்.

"குற்றம், தண்டனை இரண்டுமே இவனுக்குத் தீர்ந்துவிட்டதால் மற்றபடி என்ன செய்வது என்பதை நிர்ணயித்துக் கொள்ளப் பிரம்மதேவனிடமே

இவனைச் சபை கலைந்ததும் அனுப்பிவிடுங்கள்!" சித்திரபுத்திரன் சிவகிரியின் ஏட்டைப் புரட்டிப் படித்தார்.

"சிவகிரி சீமானாகப் படைக்கப்பட்டான்! இவன் அக்கிரமங்களைப் பெரிய ஆலயமாகக் கட்டினான். அதில் அமைந்த ஆண்டவன் சிலைபோல, இவன் செய்த அநியாயம், தன்னிடம் வேலை பார்த்த ஏகாம்பரத்தை அலட்சியத்தாலும் அகம்பாவத்தாலும் எட்டி உதைத்துக்கொன்றது. அதை எவரும் அறியாமல் மறைத்து உலக தண்டனையிலிருந்து தப்பினான்."

நீதிதேவன் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு தீர்ப்பைப் பேசினார்:

"சிவகிரியை அவன் உலகில் வாழ்ந்த அளவு காலம் வாழ நரகத்தில் பிடித்துத் தள்ளுங்கள்!"

சிவகிரி பணிவாக ஒரு விண்ணப்பம் விடுத்தார். கூட்டத்தின் கவனம் முழுதும் அமைதியும் ஆவலும் வழிய அவர் மீது பதிந்திருந்தது.

சிவகிரியின் கேள்விகளுக்கு நீதிதேவனே பதிலிறுத்தார்.

"நீதிதேவா! ஏகாம்பரம் உதைக்கப்பட்டு இறந்தது எதனால்?"

"அவன் அப்படி இறக்க வேண்டும் என்று படைக்கப்பட்டிருந்தான்!"

"நான் உதைத்திராவிட்டால்! ......"

"அவன் இறந்திருக்கமாட்டான்!"

"அதுமட்டுமல்ல, பிரம்மதேவனின் கட்டளையும் நடந்தேறியிருக்காது."

நீதிதேவன் சிந்தனையால் சிலையானார். சிவகிரி பேசினார். கூட்டத்தில் பரபரப்புக்கூடிய அமைதி!

"பிரம்மதேவன் கட்டளை நிறைவேற நான் ஒரு கருவியாக்கப்பட்டேன். குற்றம், வாளின் மீதல்ல — அதை வீசிய வீரன் மீதுதான்! நான் ஆள் உருவில் இருந்த வாள்! வீசியவர் பிரம்மதேவன் — அவர் விதித்த விதி! இதேபோல்தான் மற்றவர் துன்பமடைவதற்கும் நான் கருவியாக்கப்பட்டேன். கருதிய காரியத்தைச் சரியாகச் செய்து வெற்றிவாங்கித் தந்த வாளுக்கு முத்தம் தருவான் சுத்த வீரன்! எனக்கோ தண்டனை! வீரவாள் உடைக்கப்படுவதா? ஈரமே தேவலோக நெஞ்சில் கிடையாதா? ஓ! காலதேவா! உம் பெயர் நீதி தேவனா? அக்ரம தேவனா? சொல்லும்!"

ரம்பையின் ஆட்டம் முடிந்ததும் மேனகையின் ஆட்டம் உடனே தொடங்குவதுபோல சிவகிரியின் பேச்சு முடிந்து நின்றதும் ஏகாம்பரம் கனைத்துக்கொண்டு பேச்சைத் தொடங்கினான்!

"நீதிதேவா! என் பீதியெல்லாம் போய்விட்டது. காரணம், எனக்கு முன்பு அளித்த தீர்ப்பில் நீதியில்லை. ஏழைகளை எட்டி உதைத்ததற்காக எட்டி உதைக்கப்பட்டு உயிர்விட்டேன் நான். அவர்கள் என்னால் உதைபட்ட

தற்குக் காரணம், அப்படி அவர்கள் அனுபவிக்கும்படி செய்த அவர்களின் முன் ஜன்ம பாபம்! அந்தப் பாபத்தை அவர்கள் அநுபவிக்க நான் கருவியாக்கப் பட்டிருக்கிறேன். வீர வாள் உடைக்கப்படுவதா என்று கேட்டார் சிவகிரி! நான் அநியாயமாகத் தண்டனையையே அநுபவித்துவிட்டிருக்கிறேன். வீர வாள் இங்கே உடைக்கப்பட்டே முடிந்துவிட்டது. அக்கிரமத்துக்குத்தான் தேவலோகத்தில் நீதி என்ற பெயரா?"

மின்னல்கள் ஆடின. நட்சத்திரங்கள் அசைந்தன. தேவமாதர்கள் மூர்ச்சையானார்கள். நீதிதேவன் மயங்கி ஆசனத்திலிருந்து உருண்டார். சித்திர புத்திரன் விரித்த புத்தகத்தில் விழுந்து கிடந்தார். கூட்டத்தின் கூக்குரலையும் பிய்த்துக்கொண்டு 'வாயாடிகள்' என்ற உச்சரிப்பு தெளிவாக வெளிவந்தது!

சிவகிரி திடுக்கிட்டு விழித்துக் கொண்டார். பங்களாவின் வெளியே கார் நின்ற ஓசை கேட்டது...... சென்னையிலிருந்து வந்த புதிய டாக்டர் பத்து நிமிடம் அவரைப் பரிசோதித்துவிட்டுச் சொன்னார்.

"இரண்டே மாதத்தில் குணப்படுத்திவிடலாம்!"

சிவகிரி கூப்பிய கரங்களுடன் ஆச்சரியம் தொண்டையை அடைக்கக் கேட்டார்:

"இரண்டாயிரம் ரூபாய் வேண்டுமானாலும் தருகிறேன். கால் — நடக்க முடியுமா?"

"ஓட்டப் பந்தயத்தில் முதல் பரிசு வாங்கு மளவுக்குக் கால்களைச் சரிப்படுத்திவிடமுடியும்!"

"நிஜமாகவா?"

"பத்திரம் வேண்டுமானாலும் எழுதித் தருகிறேன்!"

இருவர் புன்னகையும் ஒன்று கலந்தன.

நமக்குள்ளே

சுகி

2

"ஈசன் படியளக்கும்
இதிகாச காலமல்ல
ரேசன் படியளக்கும்
ரெண்டும் கெட்ட காலமய்யா''

என்பதாகத்தானே ஒரு ரேஷன் காலக் கவிஞர் பாடியுள்ளார். முன்னாளில் பாலுந் தெளி தேனும், கனியுதிர் சோலைகளில் ஓடிக்கொண்டிருந்தன. இன்று?

விலைபொருளில் மட்டுமன்றி வேலைத்திறனிலும் மாறுபாடுகள் வந்துவிட்டன. 'லக்நௌ'வில் நடந்த பேனா வீரர்கள் வேலை நிறுத்தம் அப்படிப்பட்டது. முன்னாளில் மேலதிகாரிகூட வேண்டாம், குமாஸ்தா தலைமைக் குமாஸ்தாவைக் கண்டால், ஜீப் காரைக் கண்ட பாதசாரி மாதிரி பயம். இப்போது மூர்தாபாத் ரயில்வே சூப்ரன்டெண்டு அலுவலகத்தில் பேனாவைக் கீழே வைத்துவிட்டார்களாம். காரணம் லீவு பெற மனுக் கொடுத்தும், லீவு கொடுக்க மறுத்தாராம் ஆபீசர்.

ஆபீசர் குமாஸ்தாவைப் பார்த்துக் 'குலைக்காதே' என்று சொன்னதாகவும், குலைப்பது தான் அல்லவெனக் குமாஸ்தா பதில் சொன்னதாகவும் தெரிய வருகிறது. அத்தோடு நிற்கவில்லை, தமது ராஜிநாமாவை எழுதிக்கொண்டுபோய் மேல் உத்யோகஸ்தரிடம் கொடுத்தார் குமாஸ்தா. யூனியனில் தெரிவித்தார். யூனியன் தாங்கள் செய்யப் போகும் வேலை நிறுத்தத்தைப் பற்றித் தெரிவித்தது. குமாஸ்தாக்கள் வெளியேறினார்கள்.

சூப்பரின்டெண்டு தமது சகபாடிக்காக மன்னிப்புக் கேட்டும், தவறு செய்தவரையே மன்னிப்புக் கோரச் சொன்னார்கள் குமாஸ்தாக்கள். ஆபீஸர், தமது நடத்தைக்கு வருந்துவதாகச் சொன்னாரே தவிர, மன்னிப்புக் கேட்கவில்லை. "மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்ற சேதியை வற்புறுத்தவே, ஆபீசர் முடிவில் மன்னிப்புக் கேட்டாராம்.

இதைக் காணச் சகியாத, அவர் தோழர் "வருங்காலத்தில் இந்தக் குமாஸ்தாக்களை நடத்துகிறபடி நடத்தவேண்டும்" என்று முணுமுணுக்க, இதனைச் செவிமடுத்தோர், "இவரும் மன்னிப்புப் பெற வேண்டும்; இல்லையென்றால் மறுபடியும் வேலைநிறுத்தம்" என்றார்கள். இரண்டாவது ஆபீஸரும் மன்னிப்புக் கேட்டார். குமாஸ்தாக்கள் தம்தம் மேஜைக்குப் போய் அமர்ந்தார்களாம்!



'மன்னிப்புக் கேட்கவேண்டும்'

பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை விட்டுப் போனாலும் அவர்கள் ஆதிக்க வெறியை ஒரு சில ஆபீஸ் தெய்வங்கள் கைப்பற்றிக்கொண்டு விட்டதாக எண்ணிக்கொண் டிருக் கிறார்கள்.

* * *

"தொலைந்து போன சாமான் களுக்கு இங்கே விசாரிக்கவும்" என்று பஸ் கம்பெனியில், தொங்கிய போர்டுக்கு எதிராக ஒருவர் வந்து நின்றார்.

"நீங்கள் எந்த ஊர்?"

"காக்கிப் பை; அதற்குள் என் டயரி? துணிமணி, பர்ஸ் இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே, "அது அதுதான்" என்று சுட்டிக் காட்டினார் வந்தவர். தம்மைப்போல மறதி யாளர்கள் எவ்வளவு பேர் தவற விட்ட, சாமான்கள் எத்தனை யென்று அறிந்தபோது வந்தவ ருக்குத் திருப்தி.

"உங்கள் பெயர்?" பெயர் விலாசம் சொன்னார்

"வைத்தியநாதன், எழுத் தாளர், பென்ஷனர் தெரு..." என்று டயரியில் இருந்தது.

"சரி நீங்கள் எழுத்தாளரா? என்னென்ன எழுதுகிறீர்கள்?" என்றார் பயபக்தியுடன்.

"எழுத்தாளர் நான்..."

"இப்படி உள்ளே வாருங்கள். உங்கள் புனைபெயர்?"

"நான், மாவட்டக் கழகத் திலே ஒரு குமாஸ்தா. குமாஸ்தா என்பதை எழுத்தாளன் என்று போட்டேன். எனக்கும் பத்திரிகைக்கும் தொடர்பு கிடை யாது."

பெரிதாகக் கற்பனை செய்த அந்தக் குமாஸ்தா, "சரிசரி, போ மய்யா. உம்மை ஒரு கதாசிரியர், நாவல் ஆசிரியன் என்று கற்பனை செய்தேனே." என்று கோப மாகப் பையைக் கொடுத்து அனுப்பினார்.

* * *

இந்தக் காலத்தில் ஒரு சௌ கர்யம் இருக்கிறது; எதைப் பார்த் தும் ஏமாந்துவிடலாம்.

* * *

தாங்கள் ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணமின்றியே ஏமாற்றி விடுகிறார்கள். என் நண்பருக்கு 'பி. எல். பிள்ளை' என்று பெயர். அவர் வக்கீல் அல்ல; வக்கீல் மாதிரி எதையும் வாதாடுவார். அவருக்கு 'பி. எல்.' என்ற பட்டம் அரசாங்கம் கொடுக் காமல் வந்து விட்டது. கடிதங் களிலே அவர் பெயருக்குப் பின் னால் பி.எல். வருகிறது. எங்கள் ஊர் வக்கீல்களைவிட இந்த பி.எல். பிரபலஸ்தர். தமது பெயரை

அடுத்து இன்னொரு உதாரணம் எம். ஏ. என்று போட்டுக்கொள்ளும் சகதொழிலாளி ஒருவர் எங்கள் அலுவலகத்தில் இருக்கிறார். எம். ஏ. தண்டாயுதம் என்று நியாய முறையில் எழுதாமல் தண்டாயுதம், எம்.ஏ. என்று எழுதுவார் அவர். கலாசாலைக்குள் நுழையாமலேஎம்.ஏ. ஆகிவிட்டார். அறிவாளிகள் பட்டங்களைப் பறக்கவிடுவார்கள்; அறிவிலிகள் பட்டங்களைச் சூடிக்கொள்வார்கள் என்று சொன்னவர்களை எந்தக் கூட்டத்தோடு நாம் சேர்ப்பது?



* * *

சிலருக்குப் பட்டங்கள் அழகு தருகின்றன; சிலரால் பட்டங்கள் அழகு பெறுகின்றன.

* * *

வாழ்வின் பெரும்பகுதி, வயிற்றுப் பெருமானுக்காக நாம் செய்கிற செயல்களே; இந்த நாகரிக வளர்ச்சியே, சோற்றுக்காக ஏற்பட்ட வளர்ச்சி. இந்த நாகரிகம் மனிதன் தலையில் இத்தனை சுமைகளைப் போட்டதோ; அல்லது அவன் தெரியாத்தனமாகத்தான் திண்டாடுகிறானே? மனிதப் பிறவியைப் போன்று, உணவுக்காகக் கஷ்டப்படுகிற பிறவிகள் ஏதேனும் உண்டா? எல்லா ஜீவன்களும் பசிக்கும்போது மட்டும் இரை தேடி ஊர்கின்றன; மனிதனே பசிக்காதபோதும் பறக்கிறான். என் வீட்டு ஜன்னலுக்கு எதிரே வேப்பமரத்திலே இரு குருவிகள் இருக்கின்றன. அவை எப்போதும் கும்மாளமிடுவதைப் பார்த்தால் வயிற்றுக் கவலையே இல்லையென்று படுகிறது. நான் ஒருவேளை உணவு உட்கொள்ள அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும், பர்மாவிலும் உழைக்கிறார்கள்! ஏற்றுமதி, இறக்குமதி, போக்குவரத்து என்பதாக எத்தனை எத்தனை வேலைகள்; வேலைத்தனங்கள்! மாற்றங்கள்; ஏமாற்றங்கள்!

மற்ற மிருகங்களை விட மனிதனுக்கே உணவுப்பிரச்னை பெரிய பிரச்னை; இத்தனைக்கும் இவனே உழைக்கிறவன். சிந்தனை செய்யக்கூடிய, ஒருகாட்டுமிருகம் டவுன் பக்கம் தலைநீட்டினால், அலுவலகங்களுக்குள் நுழைந்தால், மனிதனுடைய மூளையை நினைத்துச் சிரிப்பாய்ச் சிரிக்கும். குழைந்து கும்பிடுவதும், கூனிச் செல்வதும், பல்லெல்லாம் தெரியப் பரிதாபமாய்க் காட்டுவதும், மனித குலத்தில்தான் நடைபெறும். மிருக இனங்

களிலே நாய் நாயைத் தின்ப தில்லை; பூனை பூனையைத் தின்ப தில்லை; மனித குலத்தில் மனித னையே மனிதன் உயிரோடு தின் பதைப் பார்க்கிறோம். இதெல் லாம் ஒருவேளை உணவுக்காக நடைபெறுகிறவை!

உணவு மனித குலத்துக்கு அரிதாகப் போய்விட்ட காரணத் தால் மக்கள்—பக்களை நன்றி யறிவோடு பார்ப்பதில்லை; பிராந்து கோழிக்குஞ்சை நசுக்கு வதுபோல, மேல் உத்தியோகஸ் தன் தனது சிப்பந்தியைப் பார்க் கிறான்; பணக்காரன், ஏழையை அப்படியே விழுங்குகிறான்; எல்லாம் உணவுக்காக! ஒரு மான் ஒரு பிடி புல்லுக்காக, மற்றொரு மானுக்கு அடிமையாவதில்லை. அன்பினால் ஒன்றை ஒன்று உத விக்கு அழைக்கும்; பிடிக்கவில்லை, வலியதை விட்டு எளியது ஓடி விடும்; அல்லது உயிர் விடலாம். இங்கே உயிரை விட முடியாது; ஓங்கிப்பேச முடியாது; மேலும் மேலும் ரத்தஞ் சுண்டித் தலை குனிந்து, ஓடாய் உழைக்க வேண்டும்.

எல்லாம் உணவினால் வந்த வினை; நாகரிகம், நாகரிகம் என்று ஒருவேளை உணவுக்காக எத்தனை பேர் கஷ்டப்படுகிறார்கள் என் பதுதான். முன் னாளில் நூறு பேருடைய ஒரு வேளை உணவுக் குப் பத்துப்பேர் உழைத்தார்கள். இன்று பத்தாயி ரம் பேர் உழைக்



தண்டாயுதம் எம்.ஏ.



'சிரிப்பாய்ச் சிரிக்கும்'

கிறார்கள். கடல்கடந்து, துறை முகக் கட்டுப்பாடு கடந்து, சர்க் கார் நிர்வாகத்தையும் தாண்டி, வாய்க்கு எட்டுமுன்னதாகப் பசி போய் விடுகிறது; பசியை மறைத் துக்கொள்வது இன்றைய நாக ரிகத்தில் ஒரு அழகான அம்சம்; பவுடரைப்பூசி, வெள்ளுடை சாத் திக்கொண்டு சுய-க்ஷவரம் செய் தால் வீட்டில் வீசம்படி அரிசி கூட இல்லையென்பதை மறைத்து விடலாம்! கோழிக்கூட்டில்வாழ, குடிக்கக் கூழின்றி இருக்கக் கற்றுக்கொண்டான் மனிதன்; ஆனால் வெளிவேஷம் மட்டும் அவன் மறக்காது போட்டுக் கொள்ளுகிறான்!

நாகரிக வளர்ச்சி, கல்வி யறிவு, மனிதன் மனிதனோடு ஒட்டி வாழாமல், பிரிந்து வாழச்செய் யும் பெருமையைத் தெரிந்து கொண்டிருக்கிறது; உணவைப் பிறருக்குக் கொடுக்காமல் எப்ப டிப் பதுக்கலாம் என்பதை அறிந் திருக்கிறது. அறிவிலே சமத்

துவம் கொண்டாடாவிட்டாலும், வாழ்வுக்கு வேண்டிய உணவிலே சமத்துவம் கொண்டாட வேண்டும் என்பதே ரேஷன் காலம்! ஆனால், பரந்த நோக்கமும் மனிதப் பண்புமுள்ளவர்களே, நிர்வாகம் செய்ய இயலும்; அதிகாரம் பணம் இடையேவந்தவை; அவைகளைவிட மனிதத்தன்மை பரம்பரையாக வந்தது; வரப்போவது. அதை அழிக்க முயற்சி செய்வது தவறு.

'மனிதத் தன்மைக்கு' இது நல்லகாலம். அதற்குரிய விழிப்பு ஏற்பட்டிருப்பதை வாழ்வின் பல பகுதிகளிலும் பார்க்கிறோம். பணக்காரர்கள், ஏழையைத் துன்புறுத்துவது உடலோடு நின்றுவிடுகிறது, இது கொடுமை; ஆனால் இதைவிடப் பயங்கரமானது அறிவாளிகள், படித்தவர்கள் தங்களிடம் வேலை பார்ப்பவரை முட்டாளாக நினைத்துத் துன்புறுத்துவதுஆத்மதொல்லை! உடலைக் கசக்கிப் பிழிந்தால் உடல், சோர்வுநீங்கி மறுமாதத்திலாவது புதிய சக்தி பெறும்; உள்ளம் இருக்கிறதே அது தொட்டால் சுருங்கி; உடலையும் தின்று நடைப்பிணம் ஆக்கிவிடும்.



பி. எல். பிள்ளை

மனிதனைப் பிணமாக்குகிறவர்கள் பணம் படைத்தவர்கள் இந்த அரக்கர்களைவிட, கல்வி, அதிகாரம், பதவியால் சகோதரனை வாட்டுகிறவர்களே இன்றைய சமுதாயத்தில் நிறைய இருக்கிறார்கள்.



'பூலோகத்தில் மனிதன்'

தன்னலம், ஆணவம், ஆதிக்கவெறி மறந்து, மனித சமுதாயம் என்ற பரந்த நோக்கம் பணம் படைத்தவர்களைவிட, படித்த அறிஞர்கள், பதவிக்காரர்களுக்குத் தேவை.

* * *

ஒருநாள் உணவை ஒழிக்கவும் இருநாள் உணவை ஏற்கவும் முடியாது அன்றாடத் தொல்லைதருவது வயிறு.

* * *

மனிதன் அனுபவிக்கக்கூடிய உணர்ச்சிகளில், பசியும் ஒன்று. பசிக்கும்போது உடலும் உள்ளமும் துடிக்கின்ற இன்பபோதை இருக்கிறதே, இதற்கு ஈடும் இணையுமான உணர்ச்சி வேறு என்ன! இதே பசிக்குப் பசியடங்கும் வரை ஆகாரம் கிடைக்கும்போது ஏற்படுகிற இன்ப உணர்ச்சியே! பசிக்கும் வயிறும், பசித்தவுடன் கிடைக்கும் உணவும் ஒருவனுக்கு இருந்தால் அவனே பூலோகத்தில் மனிதன். பசிக்காத வயிறு உள்ளவனும், ஆகாரம் கிடைக்காத வயிறு உள்ளவனும் ஒரே வித தொந்-

தாவை அடைகிறார்கள். நோயற்ற வாழ்வைவிடப் பசிக்கும் வயிறுள்ள பணக்கார சமூகமும், உண்ணும் உணவு கிடைக்கக் கூடிய ஏழைச் சமூகமும் சங்கமம் ஆனால், 'அதுவே உண்மையான மனித வளர்ச்சியைக் காட்டும். 'தனி யொருவனுக்கு உணவில்லை யெனில், ஜகத்தினை யழித்திடுவோம்!' என்ற பாரதியும், 'ஒருவனுக்கு உண்ண உணவளிக்காவிட்டால், இந்தப் பூமியைப் படைத்த இறைவன் தலைமையையே அழிப்போம்' என்று வள்ளுவரும் சொன்னார்கள். இவர்கள் போக்கு இன்றைய பசிப் பிணியாளர்களுக்குப் பிடிக்காமல், 'மனிதப் பூண்டுகளை நசுக்கி விட்டால் போதும்' என்ற ரீதியில் இருக்கிறது.

ஒரு நாட்டின் பெருமை, முன்னைப்பழங்காலத்திய கலாச்சாரம், பண்பாட்டினால் மட்டுமன்று; அந்நாட்டில் பசியினால் வாடும் மக்கள் இருக்கவே கூடாது.

அதுதான் போகபூமி; பாலும் தேனும் கனியுதிர் சோலைகளில் ஓடும் கற்பனை நாடு; அதாவது பண்டைத் தமிழ்நாடு!

ஒரு சொல்

வீர. பழனியப்பன்

புகைச்சுருள்கள் அறையினின்றும் வெளியேற முடியாமல் திணறிக் கொண்டிருந்தன. சிதைந்து கிடந்த 'சிகரெட்' துண்டுகள் அவனுடைய சிந்தனையைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தன. ஆனால் அவன்......

கையிலிருந்த 'சிகரெட்' வாய்க்கும், வாயிலிருந்து புகை கிளம்பி அவனை வட்டமிடவும், எங்கேயோ நினைவைப் பறக்க விட்டுவிட்டு இயந்திரம் போல் இயங்கிக் கொண்டிருந்தான்.

உம்...ம்...ம்...

அமைதித் திரை கிழிந்தது. நினைவு ஒரு நிலைக்கு வந்தது. அவனுடைய அங்கங்களில் ஒரு அசைவு ஏற்பட்டது. புதுப்புது உணர்ச்சிகள் அவன் முகத்திலே வெள்ளோட்டம் விட்டு விளையாடிக் கொண்டிருந்தன.

"ரஹ்மத்..." அவனுடைய உதடுகள் முணுமுணுத்தன.

தண்டைகள் ஒலித்தன. ஒரு அழகி உள்ளே நுழைந்தாள். அவள் முகத்திலே களிப்பு. ஆனால் அவன் முகத்திலோ கவலை!

"ஜானி, ஏனிப்படிக் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கே?"

அவன் ஏக்கம் நிறைந்த கண்களோடு அவளைப் பார்த்தான்.

"ம்......பழமைப் பிடியிலே சிக்கிப் பைத்தியக்காரர்களாக உலவும் இவர்களால் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது. வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதே, ஜானி." அவள் குரலில் கண்டிப்போடு கனிவும் கலந்திருந்தது.

"ரஹ்மத்!" ஆர்வத்தோடு அவளை அழைத்தான்.

அந்த ஒய்யாரி எங்கோ ஓடிவிட்டாள்.

"ரஹ்மத்" அவன் தலையை உலுக்கிக் கொண்டான். எதிரில் ஒருவரும் இல்லை. எல்லாம் உருவெளித்தோற்றம்! எழுந்தான். அவன் எதிரில் கிடந்த 'நிக்காஹ்' பத்திரிகை அவன் நிலையைக் கண்டு 'நையாண்டி' செய்துகொண்டிருந்தது.

"ம்...ம்...ம்" ஒரு பெருமூச்சின் சிறல்.

அவன் கைகள், முகத்தைச் சுற்றிச் சுழன்றன. அவசரமாக ஏதோ ஒரு கடிதத்தை எடுத்தான். படித்தான்.

"ஜானி,

உங்கள் பெயரை வரையும் போதே உள்ளம் பூரிக்கிறது. ஆனால் அந்தப் பூரிப்பைப் புரிந்து கொள்ளும் சக்தி என் தந்தைக்கு இல்லை. அதன் விளைவுதான் அவர் எனக்கு 'நிக்காஹ்' செய்வதற்கு முனைந்து நிற்கிறார். பாவம்! பாழும் பழக்க மோகம் அவரை, ஒட்டியிருக்கும் நம் இரு உள்ளத் தொடர்பை வெட்டி

அட்டைப்படக் கதை

விடத் தூண்டுகிறது போலும்.

நெருக்கடியான இந்த நேரத்தில், கோழைபோல நடந்து நம்வாழ்வைக் குட்டிச்சுவராக்கிக் கொள்ளக்கூடாது. என் வரையில் துணிவோடு காரியமாற்றி. நம் துயரைத் துடைத்துக்கொள்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.

'பெண்களின் சம்மதத்தின் பேரில்தான் நிக்காஹ் செய்து வைக்க வேண்டும்' என்று எங்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள உரிமை இன்னும் பழக்கத்தில் தானே இருந்து வருகிறது. மணப்பந்தலில் நான் 'ஹபூல்' (சம்மதம்) சொல்லாவிட்டால் நிக்காஹ் எப்படி நடைபெறும்?

'ஷேக்'கிற்கும் 'கானு'க்கும் 'நிக்காஹ்' செய்து வைப்பது பழக்கமில்லை என்று கூறிய என் தந்தை, பெண்ணின் சம்மதம் இல்லாமல் 'நிக்காஹ்' செய்து வைத்துப் புதுப்பழக்கத்தையா ஏற்படுத்தப் போகிறார்?

மதம் நம்முடைய மணத்திற்குத் தடையாக இல்லை. 'இந்த' மனிதர்களின் முயற்சியும் நம்மைத் தடுத்துவிட முடியாது. பிறகு நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? உறுதியுள்ள உள்ளத்திற்கு 'ஹபூல்' என்னும் ஒரு சொல்லும் துணையாய் இருக்கும்போது 'நிக்காஹ்' பத்திரிக்கையைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டாம். அல்லாவின் ஆசி நமக்கு எப்போதும் உண்டு.

இங்ஙனம்
தங்கள் அன்பின் அடிமை
ரஹ்மத்"

"ம்..." அவன் உதட்டில் ஒரு புன்னகை மின்னியது. கடிதத்தை மேஜை மீது வைத்தான். அங்கே கிடந்த 'நிக்காஹ்' பத்திரிகையை அலட்சியமாகப் பார்த்தான். வாழ்க்கை வயலிலே உறுதி உரமிட்டு மாதர் உரிமை என்னும் மழையும் பெய்துவிட்டால் காதல் பயிர் வளர்வதைப் பற்றியபயம் தோன்ற முடியுமா?

'ரஹ்மத்...நல்ல துணிச்சல்காரி!' என்ற எண்ணம் அவனுடைய நெஞ்சை வட்டமிட்டது. சிந்தனைப் பாம்பு எண்ணங்களை நோக்கிச் சீறியது. எண்ணங்கள் சுழன்று இறந்த காலத்தை நோக்கி ஓடின.

●

'இண்டர்' வகுப்புப் பரீட்சைகள் முடிந்து விட்டன.

ஷேக் ஹுசைனுக்கு, வீட்டு நினைவு — அம்மாவைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை—எனவே முன்னதாகவே ஊருக்குக் கிளம்பினான். பாழும் ரயிலுக்கு அவனுடைய அவசரம் புரிகிறதா? நத்தைபோல ஊர்ந்து, சூரியன் மறைவதற்குச் சற்று முன்பாகத்தான் ஊர் வந்து சேர்ந்தது.

அந்தியெனும் அழகுச் சேலையணிந்து சுந்தரமாக விளங்கிய சூரியன், சந்திரனுக்கு இடமளித்துத் தன்னிருப்பிடம் ஏகினான். உல்லாசப் பிரயாணி



போல ஓரிரு இளம் தாரகைக ளுடன் ஒயிலாகப் பவனி வந் தான் சந்திரன்.

வானத்தில் தோன்றிய மாறு பாடுகள் ஹூசைனின் கவனத் தை ஒன்றும் இழுக்கவில்லை. அவனுடைய உள்ளத்திலே தாயைக் காணவேண்டுமென்ற தவிப்பைத் தவிர வேறு ஒன்றிற்கும் இடமில்லாமல் இருந்தது.

தூரம் குறைந்து கொண்டே போய் ஒரு வழியாக வீடும் வந்தது.

கையிலிருந்த பையை வீட்டுத் திண்ணையில் போட்டுவிட்டு, கதவைத் தள்ளினான். கதவு திறந்து கொண்டது.

அவன் என்ன நினைத்தானோ என்னவோ, பூனைபோலக் காலடி ஓசையைக் காட்டாமல் உள்ளே நுழைந்தான். உள்ளே ஒரு பச்சை 'சால்வையை'ப் போர்த் திக் கொண்டு அவனுடைய அம்மா படுத்திருந்தாள்.

அவனுடைய வாலிப உள்ளம் வாஞ்சையின் விளையாடுமிடமாக மாறியது. அவன் குழந்தை யானான். மெதுவாக அவள் பக்கத்தில் சென்று, இடுப்பில் தன்னுடைய இரு விரல்களால் நிமிண்டி, "மா" என்று அழைத் தான்.

படுத்திருந்தவள் பரபரப் போடு எழுந்தாள்.

அவள் அவனுடைய அம்மா அல்ல. வேறு யாரோ ஒரு இளம் பெண். அவனுடைய குதூகலம் அந்தர்த்தியான மாகியது. திகைப்பு அவனைத் திணற அடித்தது.

'அம்மா போர்த்தியிருக்கும் அதே பச்சைச் சால்வை. அம்மா படுத்திருக்கும் அதே இடம்.

ஆனால் அம்மா இல்லை. பிறகு இவள் யார்?' இந்தக் கேள்வி அவன் மூளையைக் குழப்பியது.

"யார் நீ?" அந்தப் பெண் அவனை நோக்கி அதட்டிக் கேட்டாள்.

அந்த நேரத்தில் அவனுக்கும் அந்தப் பெண்ணை அதே கேள்வியைத்தான் கேட்க வேண்டுமென்று தோன்றியது. ஆனால் வார்த்தைகள் உருவாகி வெளி வந்தால்தானே!

"என்ன நான் கேட்கிறேன், நீ பேசாமல் நிற்கிறாய்? யார் நீ? எங்கே வந்தாய்?" மெஷின் கன்னிலிருந்து கிளம்பும் வேட்டுகள் போலப் படபட வென்று கேள்விகள் வெளிவந்து கொண்டிருந்தன.

"வந்து..........." மேலே ஒன்றும் கூறமுடியாமல் திணறினான்.

"வந்தாவது, போயாவது, வீடு திறந்திருந்தால் விரு விருன்னு உள்ளே நுழைவதோ? ஆளைப்பாரு. போ வெளியே."

'போவெளியே' என்று தன் வீட்டிலிருந்து ஒரு பெண் தனக்கு உத்தரவிடுவதை அவனால் சகிக்க முடியவில்லை.

அவளை ஆத்திரத்தோடு முறைத்துப் பார்த்தான். அவனுடைய ஆத்திரம் அவளுடைய அழகைக் கண்டு பயந்து ஓடி விட்டது. பொறுமையாகப் பேசலானான்.

"என்னுடைய வீட்டிலே நான் நுழைவதுக்குக்கூட 144- உத்தரவா? அம்மா எங்கே? வெளியேயா போயிருக்காங்க?"

அவள் அவனை உற்று நோக்கினாள். அவளுடைய கோபமெல்லாம் எங்கேயோ பறந்து போய், வெட்கத்தால் முகம் சிவந்தது. சால்வையை இழுத்து முகத்தை மூடிக்கொண்டு பக்கத்திலிருந்த அறைக்குள் நுழைந்தாள்.

ஹுசைனுக்கு இவளுடைய போக்குப் புரியவில்லை.'இவ்வளவு நாழிகை ஆத்திரமாகப் பேசியவள் இப்பொழுது அறைக்குள் ஏன் பதுங்க வேண்டும்? இந்தப் பெண் யார்?' என்பன போன்ற கேள்விகள் அவனுடைய சிந்தனையில் தடுமாற்றத்தை ஏற்படுத்தின.

சற்று நேரம் மௌனம் நிலவியது.

"அம்மா எங்கே போயிருக்காங்க?" அவன் மௌனத்தைக் கலைத்தான்.

"சற்று முந்திக் கடைக்குப் போவதாகச் சொல்லி விட்டு வெளியே போனாங்க. கொஞ்ச நாழிகையிலே திரும்பி வந்திடுவாங்க."

உள்ளேயிருந்து பதில்வந்தது.

அவனுக்கு இந்தப் பதில் மிகவும் 'எக்கச் சக்கமான' நிலையை உண்டு பண்ணி விட்டது. 'ஒரு இளம் பெண்ணுடன் ஒரு வாலிபன் தனியாக வீட்டினுள் இருப்பது சரியா? சே........ இருக்கக் கூடாது. வீணாக அவளுக்கு நம்மால் ஏன் கெட்ட பெயர் ஏற்பட வேண்டும்?' அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

"நான் வெளியே போய்விட்டு அம்மா வந்தவுடனே வருகிறேன். நீங்க ஒன்றும் அம்மா வந்தவுடனே, நான் இங்கே வந்த விஷயத்தைச் சொல்லவேண்டாம்" என்று ஒரு வேண்டுகோளோடு தன் முடிவை வெளியிட்டான்.

உள்ளேயிருந்து சிரிப்பொலி கேட்டது. வெளியே போகத் திரும்பியவன், அந்தச் சிரிப்பொலியைக் கேட்டுத் திகைத்துத் திரும்பினான். அறைக்குள்ளிருந்து அவள் எட்டிப் பார்த்துவிட்டுத் தலையை உள்ளே இழுத்துக் கொண்டாள்.

'அவள் ஏன் சிரிக்க வேண்டும்!' மீண்டும் அவளுடைய செய்கை அவனுக்குப் 'புதிர்' போட்டது. சிந்தனையில் ஆழ்ந்தவாறே வெளியில் வந்தான். கதவு தாழிடப்படும் சப்தம் கேட்டது. அவனுக்கு வெளியே போவதற்கே பிடிக்கவில்லை. திண்ணையிலே உட்கார்ந்து விட்டான்.

அவனுடைய மனதில் என்னென்னவோ எண்ணங்கள் வினாடிக்கு வினாடி தோன்றி மறைந்து கொண்டிருந்தன. அந்த எண்ணங்களில் எல்லாம் 'ஏன் அவள் சிரிக்க வேண்டும்!' என்ற கேள்வி எதிரொலித்துக் கொண்டிருந்தது.

"ஜானி......எப்போ ஊரிலிருந்து வந்தே?" என்ற தழதழத்த குரல் கேட்டு அவன் திரும்பினான். அவனுடைய தாய் நின்றுகொண்டிருந்தாள். அடங்கிக் கிடந்த பாசம் மேலெழுந்தது.

"மா...இப்பத்தான் ஊரிலேயிருந்து வருகிறேன்" என்று அந்தக் கிழவியின் வெண்மயிரினைக் கோதிவிட்டான்.

"ரஹ்மத் பேட்டி....ரஹ்மத் பேட்டி, கதவைத் திற."

அவள் குரலில் ஆர்வம் நிறைந்திருந்தது.

'ரஹ்மத்'—அவன் உதடுகள் இந்த வார்த்தையைத் திருப்பி கூறிப் பார்த்துக் கொண்டன. அவன் உள்ளத்திலே ஒரு கிளுகிளுப்புத் தட்டியது!

கதவு திறக்கப்பட்டது. அவனுடைய தாயார் முதலில் உள்ளே நுழைந்தாள். மெதுவாக அவனும் உள்ளே நுழைந்தான்.

"ம்........பரீட்சையெல்லாம் ஒழுங்கா எழுதியிருக்கிறாயா?"

"எல்லாம் நல்லாத்தான் எழுதியிருக்கிறேன் மா........" என்று அவளுடைய கேள்விக்கு அவன் வாய் பதில் சொல்லியதே ஒழிய, கண்கள் சுற்றுமுற்றும் அந்தப் பெண்ணைத் தேடித் திரிந்துகொண்டிருந்தன. ஆனால் அந்தப் பெண்ணை அங்கே காணோம்.

'கதவைத் திறந்துவிட்டு உள்ளே வந்தவள் எங்கே போனாள்?' என்ற ஆராய்ச்சியில் அவன் ஆழ்ந்தான்.

"ஏன் ஜானி, வருவதற்கு முந்திக் கடிதாசி எழுதிப் போடக் கூடாதா? திடுதிப்புனு வந்திட்டியே!"

அவனுடைய கவனம் இந்த அன்புமயமான வார்த்தைகளால் திருப்பப்பட்டது. "இல்லே மா. என்னமோ நினைச்சேன்.

உடனே கிளம்பி வந்துவிட்டேன்" என்று பட்டும் படாதுமாய்ப் பதில் சொன்னான்.

"நல்ல பிள்ளை......" மகனின் அன்பிலே அவளுக்கு ஒரு பூரிப்பு ஏற்பட்டது. அவன் ஒன்றும் சொல்லாமல் சிரித்துக் கொண்டிருந்தான்.

"கொஞ்சம் இரு, ஜானி. இதோ வந்துட்டேன்." என்று சொல்லி அவள் அறைக்குள் சென்றாள்.

தனிமையில் அவனுடைய கண்கள் 'துருதுரு' வென்று அங்குமிங்கும் வட்டமிட்டன. அந்தப் பார்வை அவனுக்கு எதிரில் மாட்டியிருந்த கண்ணாடியில் பட்டதும் திடுக்கிட்டு நின்றுவிட்டது. கண்ணாடியில் அந்தப் பெண்ணின் உருவம் தெரிந்து கொண்டிருந்தது. அவள் அறை ஜன்னல் வழியாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஹுசைனுக்கு உடலெல்லாம் புல்லரித்தது. அவன் கண்ணாடியில் காணப்பட்ட உருவத்தின் அழகில் சொக்கி நின்றான்.

கண்ணாடிக் கன்னங்கள்; காந்தக் கண்கள்; களிப்பூறும் உதடுகள்; அங்குமிங்கும் ஊர்ந்து செல்லும்இரண்டு பின்னல்கள்.

'ரஹ்மத்' என்ற வார்த்தை தொண்டையிலிருந்து கிளம்பி, உதடுகளில் மோதுண்டு உள்ளத்திலே எதிரொலித்தது.

"ரஹ்மத் பேட்டி.........நீ இன்னும் இங்கேதான் நிற்கிறியா? வீட்டுக்குப்போகவில்லை?" உள்ளேயிருந்து அவனுடைய அம்மாவின் குரல் கேட்டது. கண்ணாடியில் காணப்பட்ட உருவம் மறைந்தது.

உள்ளே 'கசமுச' வென்று பேசிக் கொள்ளும் சப்தம். ஆனால் அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று அவன் காதில் விழவில்லை.

"ஜானி, நீ கொஞ்சம் முன் கட்டில் போய் உட்கார்" என்று அவனுக்கு உள்ளேயிருந்து உத்தரவு வந்தது.

அவனுக்கு அந்தப் பெண்ணை இன்னும் கொஞ்சம் பார்க்க வேண்டும் என்ற ஆவல்தான். ஆனால் அம்மாவின் உத்தரவை மீற முடியுமா? முன்கட்டிற்குப் போனான்.

தண்டைகளின் ஒலி கேட்டது. சிறிது நேரம் சென்று அந்த ஒலி குறைந்துகொண்டே போய் மறைந்துவிட்டது.

"மா...இப்போ இங்கேயிருந்து போனது யாரம்மா?"

"பக்கத்து வீட்டிலே அஷ்ரப் கான்னு ஒருத்தர் புதுசா குடி வந்திருக்கார். அவருடைய மகள் தான் இந்தப் பெண். 'குர்-ஆன்' சொல்லிக்கிறதுக்காக இங்கே வரும்."

'இந்தப் பட்டு ரோஜாமலர் பக்கத்து வீட்டு பட்டாணியப் பெண்' என்று மனதிற்குள்ளேயே சொல்லிக்கொண்டான். அவனுக்கு அதிலே ஒரு தனி மகிழ்ச்சியும் ஏற்பட்டது.

"சரி ஜானி...சாப்பிட வா"

ஹுசைன் எழுந்து தாயைப் பின் தொடர்ந்தான். அவ

னுடைய நினைவு ரஹ்மத்தைத் தேடி ஓடிற்று.

* * *

நாட்கள் ஓடின. அவள் அவனுடைய கண்களில், தென்படவே இல்லை. அவனால் அவளுடைய உருவத்தை மறக்கவும் முடியவில்லை. அவனுடைய மனவேதனை அந்தக் ‘கல்நெஞ்சுக்காரிக்கு’த் தெரியவில்லை போலும்!

அன்று அவன் சாப்பிட்டு விட்டுப் படுத்திருந்தான். அரைத் தூக்கம். ஊரிலிருந்து வந்த பொழுது நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றி அவனை வாட்டி வதைத்துக்கொண்டிருந்தன.

“மா...மா.” என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்டுத் தூக்கம் கலைந்து எழுந்தான். அடுத்த வீட்டுப் பெண் ரஹ்மத் அவனெதிரில் நின்றுகொண்டிருந்தாள்.

“ஸ்ஸ்....ஊ...பூ....பூ...ஊ” என்று அவள் கையை உதறிக் கொண்டிருந்தாள். அவள் முகமெல்லாம் வியர்த்திருந்தது.

“என்ன...என்ன ?” அவன் படபடப்போடு அவளை நோக்கிக் கேட்டான்.

“மா...மா” மீண்டும் அவள் அம்மாவைத்தான் அழைத்தாள். அவன் அம்மாவைச் சுற்றுமுற்றும் தேடினுன்; காணவில்லை.

“எங்கேயோ வெளியே போயிருக்காங்கபோலிருக்கிறது. என்ன செய்கிறது, என்னிடத்திலே சொல்லக்கூடாதா ?” என்று ஏக்கம் கலந்த குரலில் கேட்டான்.

அவள் அவனை உற்று நோக்கினுள். அந்தப் பார்வையில் தான் எத்தனை கேள்விக் குறிகள்! பிறகு அவளுக்குத் தைரியம் பிறந்தது.

“ப்பூ...பூ... ஆள்காட்டி விரலிலே தேள் கொட்டிடுச்சு. உஸ்ஸ்...”

“கொஞ்சம் இரு. இதோ வந்துட்டேன்” என்று கொல்லைப் புறம் நோக்கி ஓடினுன். கருஊமத்தைத் துளிர்களில் கொஞ்சம் அவன் கொண்டுவந்தான்.

“இதிலே ஒரு இலையை வாயிலே போட்டு மெல்லு. இன்னொரு இலையைக் கடிவாயிலே தேய். கொஞ்ச நாழியிலே விஷம் இறங்கிவிடும்.”

அவள் முனகிக்கொண்டே அவன் சொன்னபடி செய்தாள்.

“இப்ப வலி எப்படி இருக்கு?” என்று தன்னுடைய சந்தேகத்தைத் தெளிவித்துக்கொள்வதற்காகக் கேட்டான்.

“கொஞ்சம் தேவலே.” அவளுடைய வாயினின்றும் முத்துக்கள் சிதறின. அவனுக்குச் சந்தேகம் தெளிந்துவிட்டது.

“இன்னும் கொஞ்சம் நாழியானுல் எல்லாம் தேவலையாயிடும்.” அவளுடன் பேசவேண்டுமென்பதற்காக, ஆறுதல் மொழி கூறினுன்.

ஆனுல் அவளோ, விரைந்து பச்சிலையைத் தேய்ப்பதில் முனைந்திருந்தாளே தவிர, இவனுடைய ஆறுதல் மொழியைக் காதில்கூட வாங்கிக்கொள்ள

வில்லை. இதைக் கண்டதும் அவனுக்கே வெட்கமாய்ப் போய்விட்டது. அவன் பேசாமல் இருந்தான்.

உழைத்துக் களைத்தவன் வீடு திரும்புவது போலக் கடிகாரம் ஒய்யாரமாக ஒவ்வொரு நிமிடமாகத் தாண்டிச் சென்று கொண்டிருந்தது. பதினைந்து நிமிடங்கள் ஆயின.

"உஸ்...அப்பாடா." என்று அவள் எழுந்தாள். அவளுக்கு விஷம் இறங்கி விட்டது. ஆனால் அவனுக்கோ, அப்பொழுது தான் உள்ளத்தில் ஒரு லேசான 'கடி' பட்டு, உணர்ச்சி விஷம் மெதுவாகப் பரவ ஆரம்பித்தது.

"இப்ப...எப்படி இருக்கு?" மெதுவாக மீண்டும் பேச்சை ஆரம்பித்தான்.

"எல்லாம் தேவலையாப் போயிட்டுது" என்று 'முக்காட்டை' எடுத்து முகத்தை மறைத்துக் கொண்டாள்.

"ரஹ்மத்...ம்..." உள்ளத்தைத் திறந்து காட்ட வாயெடுத்தான். ஆனால் எப்படிக் கூறுவது என்று புரியாமல் ஒரு தவிப்பு ஏற்பட்டது.

"உங்களுக்கு என்ன செய்யுது?"

அவனுடைய தவிப்பைக் கண்டு அவள் நையாண்டி செய்தாள்.

"வந்து...நான்...உன் மே... ரஹ்மத்..."

ஏதேதோ சம்பந்தா சம்பந்தமில்லாமல் உளறினான்.

"உங்களுச்கும் 'அது' உண்டாய்விட்டதா! என்னவோ உங்கம்மா உங்களைப்பற்றி ரொம்பப் பெருமையாச் சொல்லிக்கிட்டு இருந்தாங்களே."

அவளுடைய பேச்சு அவன் உள்ளத்தில் ஈட்டிபோலப் பாய்ந்தது.

"நான் எந்தவிதமான கெட்ட எண்ணங் கொண்டும் உன்னைப் பார்க்கவில்லை; பேசவில்லை. நான் வந்த நாள் நடந்த நிகழ்ச்சியிலேயிருந்து என்னுடைய மனம் ஒரு நிலையில் இல்லை. இப்பவும் உன்னுடைய விருப்பத்தை அறிவதற்காகத்தான் உன்னுடன் பேச ஆரம்பித்தேனே ஒழிய வேறொன்றும் இல்லை. என்னுடைய செயலிலே எதுவும் தவறு இருந்தால் என்னை மன்னித்துவிடு."

அவனுடைய பேச்சை அவள் கேட்டாள்; ஆனல் பேசவில்லை.

"ரஹ்மத்...உன்னுடைய மனதிலே உள்ளதைச் சொல்லு."

அவள் அண்ணாந்து அவனைப் பார்த்தாள். அவளுடைய கண்கள் ஏதோ அவனிடம் கூறின. அவன் கைகள் அவளுடைய முகத்தை மூடியிருந்த முக்காட்டை மெதுவாக விலக்கின. அவள் சிரித்தாள். அவனும் சிரித்தான்.

"நீ பலே கைகாரி, ரஹ்மத். என்னையே ஆழம் பார்த்திட்டாயே?" என்று அவளை இழுத்தான்.

"உங்களுக்கு ரொம்பத் துணிச்சல்." அவள் லேசாகத் திமிறினாள்.

"உனக்கிருக்கிற துணிச்சலைக் காட்டினுமா? அன்று என்னையே வீட்டை விட்டு விரட்டி விட்டாயே?" மீண்டும் சிரிப்பு. அவன் கை ரஹ்மத்தின் மோவாயைப் பிடித்தது.

"ஜானி..." வெளியே அம்மாவின் குரல் கேட்டது.

"அம்மா வந்துட்டாங்க. நான் வருகிறேன்." கிளி பறந்து விட்டது. அவன் கதவைத் திறக்கச் சென்றான்.

* * *

பிறகு இதைப்போன்ற எத்தனையோ தடைக்கற்களைத் தாண்டி வளர்ந்தது அவர்களின் காதல். ஆண்டுகள் வளர்ந்து கொண்டேவந்தன. அவன் பி.ஏ. பாஸ் செய்துவிட்டான்.

அப்பொழுதுதான் ரஹ்மத்தின் வீட்டில் 'நிக்காஹ்' பற்றிய பேச்சுக்கள் ஆரம்பமாயின. ஹுசைன் உஷாரானான். அம்மாவைக் 'காக்கா' பிடித்து, பெண் கேட்க ரஹ்மத்தின் வீட்டிற்கு அனுப்பினான். ஆனால் அவனுடைய முயற்சி தோல்வியடைந்தது.

ஹுசைன் 'ஷேக்' பிரிவைச் சேர்ந்தவன். ரஹ்மத் 'பட்டாணிய'ப் பிரிவைச் சேர்ந்தவள். அஷ்ரப்கான் தன்னுடைய மகளை வேறொரு பிரிவைச் சேர்ந்த ஹுசைனுக்குக் கொடுக்கச் சம்மதிக்கவில்லை.

ஹுசைனுக்கு இந்த அதிர்ச்சி நீங்குவதற்கு முன்பாகவே வேறொரு மாப்பிள்ளையைத் தன்னுடைய மகளுக்கு ஏற்பாடு செய்துவிட்டார் அஷ்ரப்கான்.

* * *

ஷேக்ஹுசைன் எழுந்து ஜன்னல் கதவுகளைத் திறந்தான். புகை மூட்டம் வெளியேறத் தொடங்கியது. புதுஒளி உள்ளே புகுந்தது.

மீண்டும் ஒருமுறை அந்தக் கடிதத்தைப் படித்தான். அவன் முகத்தில் ஒரு ஆனந்தம்.

"என் ரஹ்மத்...லைலா இல்லை." அவன் உதடுகள் முணுமுணுத்தன.

"ஜானி...உள்ளே என்ன செய்கிறாய்?" அது அவனுடைய அம்மாவின் குரல்.

"ஒன்றுமில்லே மா..."

அவன் அறைக்கதவைத் திறந்தான். அவனுடைய அம்மா உள்ளே நுழைந்தாள். அறை இருந்த அலங்கோல நிலையைக் கண்டதுமே அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"என்ன ஜானி, பைத்தியக்காரன் மாதிரி அறையை வைத்திருக்கே?"

"என்னவோ யோசனை பண்ணிக்கிட்டு உட்கார்ந்திருந்தேன். அதுதான் அறையைக் கூட்டவில்லை. நீ போம்மா. நான் எல்லாம் ஒழுங்கு பண்ணி விடுகிறேன்."

"ம்...ம்" அவள் பெருமூச்செறிந்தாள். மகனுடைய ஏக்கத்தின் காரணம் அவளுக்குத் தெரியாமல் இல்லை. இருந்தும் அவளால் என்னசெய்ய முடியும்?

"நான் கூட்டுகிறேன் ஜானி. நீ எங்கேயும் வெளியே போவ தானல் போய் வா. ஏன் இப்படி அறைக்குள்ளேயே அடை காத்துக்கிடக்கே!"

தன் மகன் நான்கு பேரைப் பார்த்தாலாவது கொஞ்சம் மகிழ்ச்சியோடு இருக்கமாட் டானு என்று அவனுடைய தாயுள்ளம் ஏங்கியது.

"எனக்கும் என்னவோ போலத்தான் இருக்கு. சற்று நேரம் வெளியே போய் வந்தாத்தான் தேவலே என்று நினைக்கிறேன்."

"சரி. பத்திரமாப் போய் வா ஜானி"

ஹுசைன் வெளியே வந் தான். அவனை யறியாமலே அவ னுடைய பார்வை பக்கத்து வீட் டில் விழுந்தது.

வெள்ளையடித்த சுவர்கள். அழகாகச்சாயமேற்றிய கதவுகள். அவனை யறியாமலே அவன் மன தில் ஒரு 'புழுக்கம்' ஏற்பட்டது. சற்று நேரத்தில் சமாளித்துக் கொண்டான். ஒரு அலட்சிய மான சிரிப்பு அவன் உதடுகளில் தோன்றியது. அந்த வீட்டைக் கடந்து சென்றான்.

O

அன்று முக்கியமான நாள்! அவனுடைய வாழ்க்கை இலட்சியத்தை அடைவதற்காக நடந்துவரும் போராட்டத்தின் கடைசி நாள்!

ஹுசைன், ரஹ்மத்தின் நிக்காஹுக்குப் போவதற்காகத் தன்னைத் தயார் செய்து கொண்டு கிளம்பினன்.

வானம் ஏனே கருத்திருந் தது. ஒன்றிரண்டு நட்சத்திரங் கள் அங்கொன்றும் இங் கொன்றுமாகச் சிதறிக் கிடந் தன.

ஆனல் அஷ்ரப்கானின் வீட்டு வாசலில் வர்ண விளக்குச் சரங் கள் ஒளியை அள்ளி வீசிக் கொண்டிருந்தன.

சாரிசாரியாகச் சரிகைத் தலைப் பாகையர்கள் உள்ளே நுழைந்து கொண்டிருந்தனர். அவர்களுக் குப் பின்னல் 'மௌல்வி'களும் நகர ஹாஜியாரும் வந்தனர்.

உள்ளே யிருந்த ஹாலில் அழகிய வேலைப்பாடமைந்த இரத்தின ஜமக்காளங்கள் விரிக் கப் பட்டிருந்தன. அங்கு பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகளின் ஒளியிலே, உயரே மாட்டியிருந்த லஸ்தர்களும் குளோபர்களும் அழகாகக் காட்சியளித்துக் கொண் டிருந்தன.

வந்தவர்கள் எல்லோரும் உட்கார்ந்து விட்டனர். பிறகு சபைக்கு மணமகன் அழைத்து வரப்பட்டான்.

சரிகைக் குல்லாய், உயர்ந்த பட்டுத் துணியில் தைத்த 'ஷேர்வானி' சில்க் 'பைஜாமா' முதலியவை அணிந்து 'முறுக் காக' வந்த அந்தக் 'கொலுப் பொம்மை' சபையினருக்குச் 'சலாம்' செய்தது.

அப்பொழுதுதான் ஷேக் ஹுசைன்உள்ளே நுழைந்தான். அவனுக்கு அந்த ஆடம்பரங்

களைக் காணும்போது சிரிப்பு உண்டாகியது. மௌனமாக ஒரு மூலையில் உட்கார்ந்தான். எவ்வளவுதான் அவன் அடக்கமாக இருந்தாலும், அவன் உள்ளத்தில் மட்டும் ஏனோ ஒரு 'பொருமல்!'

மௌல்வி 'பாத்திகா' ஓதித் 'துவா' கேட்கத் தொடங்கி விட்டார்.

அவனுக்கு இருப்பே கொள்ளவில்லை. ஓயாத அலைகள் அவன் உள்ளக் கடலில் எழும்பிக்கொண்டு இருந்தன. ஒரு வழியாகத் 'துவா' முடிந்தது.

"ஜன்னத்துல் கலீமாஹ, இந்தச் சபையில் உள்ளோர் ஷாஈதாஹ, நான் வக்கிலாக, ஜனாப் அஷ்ரப்கானுடைய புத்திரி ரஹ்மத் நாச்சியாரை இரண்டாயிரம் ரூபாய் மஹருக்கு......" என்று 'ஒப்பின்' பத்திரத்தைப் படிக்க ஆரம்பித்தார்.

"ஹூம்..." என்று பெருமூச்சு ஹூஸைனின் உள்ளத்திலிருந்து வெடித்து வெளிவந்தது. அவன் தன்னை 'உஷார்'ப் படுத்திக்கொண்டான்.

"......நிக்காஹ் செய்து கொள்வதற்கு உங்களுக்குச் சம்மதமா?" என்று மணமகனை நோக்கிக் கேள்வி கேட்கப்பட்டது.

"ஹபூல்" என்று சொல்லி அந்த மணமகன் தலையசைத்தான்.

"சரி...உள்ளே போய், பெண்ணிடத்தில் 'ஹபூல்' கேட்டுக்கிட்டு வாங்கோ" என்று நகர ஹாஜியார் அஷ்ரப்கானிடம் கூறினார்.

ஹூஸைனின் மனம் குதூகலத்தால் கூத்தாடியது. 'இன்னும் சில நிமிடங்களில்...' என்று இதயம் எண்ணும்போதே அவன் எங்கேயோ பறந்தான். அங்கு...

"பெண் 'ஹபூல்' சொல்ல மறுக்குதாம்" கூட்டத்திலே ஒரு முணுமுணுப்பு. முக்கியமானவர்களிடையே ஒரு பரபரப்பு.

"ஏன் சொல்ல மறுக்குது?"—ஒருவரின் கேள்வி.

"மாப்பிள்ளையைப் பிடிக்கவில்லையாம்!" இது மற்றொருவரின் பதில்.

"பெண் 'ஹபூல்' சொல்லவில்லையானால், மார்க்கச் சட்டப்படி இந்த 'நிக்காஹ்' செல்லுபடியாகாது. அந்தப் பெண் கிட்டே போய் அதுக்கு யாரைப் பிடிச்சிருக்குன்னு கேட்டுட்டு வாங்கோ...ம் போங்க..." என்று நகர ஹாஜியார் அஸ்ரப்கானிடம் பாய்ந்தார்.

> **ஒரு யோசனை!**
>
> எழுத்தாளர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக மைக்கேல் ஸாட்லர் என்ற பிரிட்டிஷ் எழுத்தாளர் அபூர்வமான யோசனை ஒன்றைக் கூறியிருக்கிறார். வாழ்க்கைச் செலவு உயர்ந்தும் புத்தக விற்பனைகள் குறைந்திருப்பதாலும் தான் எழுத்தாளர்கள் ரொம்பவும் கஷ்டப் படுகிறார்கள் என்பது அவரது எண்ணம். ஆகவே ஒவ்வொரு நூல் நிலையத்திலும் எழுத்தாளருக்காக ஒரு உண்டியல் வைத்து அதன் மூலம் வசூலாகும் பணத்தைக் குசேல எழுத்தாளர்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்று அவர் சர்க்காருக்கு யோசனை கூறியிருக்கிறாராம். எப்படி அவர் யோசனை!

ஹுசைன் இன்னும் மேலே பறந்தான்!

"ஹபூல்" பெண்ணிருந்த அறையிலிருந்து ஒரு பெரிய கூச்சல் கேட்டது. அதைத் தொடர்ந்து பெரிய ஆரவாரம்.

ஹுசைன் கற்பனை யுலகிலிருந்து திடீரென்று கீழே விழுந்தான்.

'ஹபூல்'—அந்த வார்த்தை மீண்டும் அவன் செவிகளில் ஒலித்தது.

"ஆ...ரஹ்மத்" உள்ளத்திலே வேகமாகக் கிளம்பிய ஒலி உதடுகளிலிருந்து மெதுவாக வந்தது. அவன் தலை தானகக் குனிந்தது. உடலெல்லாம் ஒரே சோர்வு. அவன் அங்கிருந்து வெளியே வந்தான்.

குருமாவையும், பிரியாணியையும் நினைத்துக்கொண்டிருக்கும் அந்தக் கூட்டத்தினருக்கு இவனுடைய உள்ளக் குமுறல் எங்கே தெரியப்போகிறது?

'பிசு பிசு' வென்று வெளியே மழை தூறிக்கொண்டிருந்தது.

"ரஹ்மத்.........ரஹ்மத்" வெளியே போனவனின் வாய் இதைத் தவிர வேறு ஒரு சொல்லையும் உச்சரிக்கவில்லை!

'சந்திரனைக் காணவில்லை' என்று வானம் அழுது கொண்டுதான் இருந்தது. வானத்திற்காவது, 'நாளையாவது நம் காதலியைக் கண்டு களிப்புறலாம்' என்ற நப்பாசை இருக்கும்...ஆனல் அவனுக்கோ...?

அவன் போய்க்கொண்டே இருந்தான்.



யாருக்கு உங்கள் வாக்கு?



* * * என் வாக்கைப் பெற விரும்பும் கட்சி தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய நான்கு மொழிவாரி மாகாணங்களைக் கொண்ட மதச் சார்பற்ற இனச் சார்பற்ற தக்கான யூனியன் ஒன்றை அமைப்பதைத் தன் உறுதி மொழியாகக் கொண்டிருக்க வேண்டும். பூகோள ரீதியிலும், பொருளாதாரத்திலும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ள ஏறக்குறைய ஒரே பண்பாட்டையுடைய இந் நான்மொழிச் சகோதரர்களை அது ஒன்று சேர்த்து அவர்களிடையில் விழிப்புணர்ச்சியையும், வீர உணர்ச்சியையும் உண்டாக்க வேண்டும். அதன் பொருளாதாரக் கொள்கை, உழைப்பாளி அவனது உழைப்பின் பலனை அடைய வகை செய்வதாயும் அதன் சமூகத் திட்டங்கள் மூட நம்பிக்கைகளையும், பகுத்தறிவுக் கொவ்வாத சாத்திரக் கட்டுப்பாடுகளையும் உடைத்தெறிவதாயும் இருக்கவேண்டும். அதன் அபேட்சகர்கள் தங்கள் நலத்தைவிட மக்கள் நலத்தைப் பெரிதாகக் கருதுபவர்களாயும், சோதனை நேர்ந்த காலத்து எதிர்த்து நின்று போராடக் கூடியவர்களாயும் இருத்தல் வேண்டும். தவிரவும் வெற்றி பெற்றகாலை அவர்கள் அரசாங்கம் நடத்தத் தகுதி வாய்ந்தவர்களாயும் இருக்கவேண்டும். இப்படிப்பட்ட கட்சிக்குத்தான் என் வாக்கு உரித்தாகும்.

வீர சோலையப்பன்
சிவகங்கை

●○●

தமிழ் நாட்டிலேயே மக்களின் மகத்தான சக்தியைப் பெற்று மாபெரும் இயக்கமாக விளங்கி வரும் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல்துறையில் இறங்காது, பிரச்சார இயக்கமாகவே இருந்துவரும் என்று சொல்வதானது, கொடுங்கோலாட்சிக்கு மீண்டும் இடங் கொடுத்தது போலாகும்; நச்சுப் பாம்புகளை நாட்டு மக்களின் மத்தியில் நடமாட விட்டதற் கொப்பாகும். தேர்தலைப் புறக்கணிப்பதானது, நாட்டு மக்களின் நலம் காக்க வேண்டிய கடமையினின்றும் தவறியதாகும். எனவே, அல்லும் பகலும் அறுபது நாழிகையும் சொல்லொணாத் துயர் தாங்கி உழைத்திடும் ஏழைகளின் சோற்றுக் கவலை நீங்கவும், ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் நீங்கி யாவரும் சரி சமமாய் வாழவும்,

---

* * * ரூபாய் மூன்று பரிசுபெற்ற கடிதம்.

சாதிபேதம் ஒழித்து, சாத்திரத் தொல்லை அழிந்து திராவிடத் தனி அரசு மலரவேண்டுமாயின், பாசிசத்தையும் நாசிசத்தையும் பன்மடங்கு மிஞ்சிவிட்ட, ஏகாதிபத்யக் காங்கிரசை வேரோடு பிடுங்கி எறிய, திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் நிற்கவேண்டும். அதற்கே எனது வாக்கு.

சீ. செல்லத்துரை
தூத்துக்குடி

●○●

இன்றைய ஆட்சியாளர் ஆங்கிலேயரின் ஆட்சியினின்று விடுதலை பெறச் சுதந்திரப் பிரசாரம் செய்து தங்கள் வாழ்நாட்களில் பெரும்பகுதியைச் சிறையில் கழித்தவர்கள். இவர்களுக்கு அரசியல் சூட்சமம் எப்படித் தெரியும்? ஆனால், ஆங்கிலேயருடனேயே பழகி, அவர்களுடைய அரசியல் தந்திரங்களைக் கற்று, நடைமுறையிலேயும், மக்களுக்கு நன்மைகள் தரக்கூடிய திட்டங்கள் வகுத்ததோடில்லாமல் வாழ்க்கையிலும் வசதி அமைத்துக்கொடுத்து, அட்வைசரி ஆட்சியிலும் அரசாங்கத்தை அமைதியாக நடத்திக்கொண்டு போனவர்கள் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களே! ஆகையால். 'பாலும் தேனும் ஓடும் எங்கள் ஆட்சியில்' என்று பறைசாற்றிவிட்டு இப்போது பாதி வயிறுகூட நிறைய வழிசெய்யாத காங்கிரஸ் ஆட்சி இனி வேண்டவே வேண்டாம். நமது சென்னை மாகாணத்தைப் பொறுத்தமட்டிலுமாவது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் ஆட்சிக்கு வந்தால்தான் பழைய அமைதியான வாழ்க்கை வாழ முடியுமென்று கருதுகிறேன்.

'சதி'
விருதுநகர்

●○●

'தேர்தலில் நான் அபேட்சகராக நிற்கப்போகிறேன், எனக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்' என யாரும் என்னிடம் வினவினால் அவரிடம், "தொழிலாளர்களின் நிலையை மாற்றியமைக்கத் திட்டமிருக்கிறதா? திராவிடம் பிரியத் திட்டமிருக்கிறதா? கல்விமுறையை மாற்றியமைக்கத் திட்டம் இருக்கிறதா? பர்மா மலேயா, இலங்கை, தென்னாப்பிரிக்காவில் உள்ள தமிழர்களைக் காப்பாற்றத் திட்டம் இருக்கிறதா? பெண்களுக்குச் சம உரிமை அளிக்கத் திட்டம் இருக்கிறதா?" எனக் கேட்பேன். அவற்கு அவர் "திட்டம் இருக்கிறது. அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உங்களைப் போன்ற இளைஞர்கள் என்னுடன் ஒத்துழையுங்கள்" எனச் சொன்னால், அவருக்கு என் வாக்கை அளிப்பேன்.

சி. சுப்பிரமணியன்
மதுரை

●○●

"தமிழ்நாடு தனியாட்சி பெறவும், தமிழ்மொழி வளர்ச்சி அடையவும், சுரண்டலற்ற, சாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கவுமே என் முழுநேரத்தையும் செலவிடுவேன்" என்று

எவர் உறுதிகூறுகின்றாரோ அவருக்கே என் வாக்கு.

நா. சுப்பிரமணியன்
கொமாரபாளையம்

●○●

மேலே நாட்டினர் ஆசிரியர்களை 'அறிவின் சின்னமாக'க் கருதி வரும்போது நமது நாட்டில் மட்டும் 'அவமானச் சின்னமாக'க் கருதிவரும் மாசு துடைத்து அன்னவரை உய்விக்கத் திட்டம் தீட்டித் தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தைகளை உலகு அறியும் விற்பன்னராக மாற்ற ஆசிரியர்களை ஊக்குவித்து ஆவனசெய்ய உறுதிகொள்பவர் ஆசிரியத் தொகுதியில் நிற்பவரானாலும், மற்றவரானாலும் அவருக்கே எனது வாக்கு.

இர. தவம்
பாவூர்ச்சத்திரம்

●○●

மதத்துக்காக மக்களின் பிதாவை—தன் இனத்துக்காக ஏந்தல் காந்தியை மாய்த்து மகிழ்ந்தான் மாபாவி கோட்ஸே. ஆனால் அவனது முடிவு? கோட்ஸே உயிரைக் குடித்த துடனுவது நின்றான். ஆனால் மானம் பெரிதென வாழ்ந்த மகாத்மாவின் மறு பிறப்புகள் என்று கூறித் திரியும் மஞ்சள் பெட்டியினர் அவரது மானம் கொள்கை, கோட்பாடு,பெருமை அன்பு, நீதி, நேர்மை ஆகிய அனைத்தையுமே அழித்து மகிழ்கிறார்கள். மக்களாட்சியை மாக்களாட்சி யாக்கி மகிழ்கிறார்கள்.நாட்டைக் காடாக்குகின்றார்கள். இவர்களின் முடிவு? கோட்ஸேவுக்கு அரசாங்கம் அளித்தது மரணதண்டனை. இந்தக் குள்ளநரிக்கூட்டத்துக்கு நீங்கள் அளிக்கும் தீர்ப்பு? தீர்ப்புக் கூறும் அதிகாரம் நமக்குண்டா என்று நடுங்க வேண்டாம் உண்டு—வரப்போகும் பொதுத் தேர்தலில் மனிதனுக்கு நீங்கள் வாக்குரிமைவழங்குதலே இவர்களுக்கு நீங்கள் நல்கும் நல்ல தீர்ப்பு. மனிதன் யார்? இன்றைய ஆட்சியின் இழிநிலை நீக்கி—வண்டமிழ் வளநாடு வாழ்வுற—இன்பத் திராவிடம் ஏற்றமுற, சாதிக் கொடுமைகள் சாய, மதம் மாள—பெண்ணுரிமை பெற—கல்வி வளர—கைத் தொழில் பெருக—தொழிலாளர் துயர் நீங்க—அரசியல் பொருளாதார—சமூக அடிமைத்தனத்தை அழித்து, இமயத்திலிருந்து விந்தியத்தைப்பிரித்து—கங்கையிலிருந்து காவிரியைப் பிரித்து—வஞ்சக நெஞ்சுடைய வடவரிடமிருந்து தென்னாட்டைப் பிரிக்க எவருக்கு நெஞ்சுரமுண்டோ நேர்மைத் திறமுண்டோ—இனப் பற்று உண்டோ அவரே மனிதர். அவருக்கே எனது வாக்குரிமை வழங்கப்படும்.

மா. முத்து
நாமக்கல்

●○●

"என் வாக்கு? வளமிக்க திராவிடநாட்டை வாழ்விக்க விரும்பும் வலிமைமிக்க எளியோருக்கு; வஞ்சகமும், சூதும் அறியாத வைரவேள் 'அழகிரிசாமி' யைப் போன்றவருக்கு; தமிழன் நாட்டையே தமிழன் பெற்றிடத்

தியாகம் புரிந்த 'தாளமுத்து—நடராஜனை'ப் போன்றவருக்கு; 'பல்லாயிர ஆண்டாகப் பழமை மிக்க திராவிட நாட்டை ஆண்டவன் தமிழனடா!' என்று அறை கூவி அழைத்திடும் 'பாரதிதாச'னைப் போன்றவருக்கு, வேல்கொண்டு வீசினாலும், வீரத்தில் சளைக்கமாட்டேனென்றுரைக்கும் வீரச் 'சித்திர புத்திரனை'ப் போன்றவருக்கு, பட்டம் பதவி பெற்றும், பாவித்துத் திரியாமல் அல்லும் பகலும் அரும் பாடுபட்டு, அன்றைய திராவிடத்தை அழகாக்க விரும்பும் 'அண்ணாதுரை'யைப் போன்றவருக்கு 'வாருங்கள்! வாருங்கள்!!' என வரவழைத்துக் கொடுக்க வாஞ்சைகொண்டழைக்கின்றேன்.

ச. ச. லோகநாதன்
காலி, இலங்கை

●○●

தேர்தல் ஜனநாயக ஆட்சியிலே அவசியமான, அடிக்கடி நடைபெற வேண்டிய நிகழ்ச்சி. தங்களுக்குப் பிடித்தமான தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள நாட்டு மக்களுக்குக் கிடைக்கும் மகத்தான வாய்ப்பு. கிடைத்தற்கரிய இந்தச் சந்தர்ப்பத்தை நாட்டுமக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் அளிக்கும் வாக்கு என்ற அஸ்திவாரக் கல்லின் மேல்தான் அரசியல் என்ற மாளிகை எழும்புகிறது என்பதை மக்கள் உணரவேண்டும். 'வாக்கு' என்றால் என்ன என்பதை நாட்டுமக்கள், அதிலும் குறிப்பாகத் தென்னாட்டு மக்கள் புரிந்துகொண்டிருக்கின்றனரா என்பது சிந்தனைக்குரிய கேள்வி. இந்தக் கேள்விக்குப் பதில் இல்லையென்றுதான் கூற வேண்டியிருக்கிறது. பிரிட்டனிலே நடைபெற்ற கடந்த தேர்தலில், பிரிட்டிஷ் மக்களின் மகத்தான ஆதரவை, யுத்தத்தில் செய்த மகத்தான வீரச்செயல்களின் மூலம் அடைந்திருந்த சர்ச்சிலை எதிர்த்து அட்லி நின்றார். நம் நாடாயிருந்திருந்தால் சர்ச்சில் பிரிட்டனுக்குச் செய்த சேவைகளுக்குச் சாகும்வரை அவரை எதிர்த்து ஒருவரும் வெற்றி பெற்றிருக்க முடியாது. ஆனால் பிரிட்டனிலே நடந்ததென்ன? வெற்றி அட்லிக்கு! ஏன்? சர்ச்சில் போன்ற ஒரு முரட்டு உள்ளம் படைத்தவரின் சேவை யுத்தகாலத்திற்குத்தான் தேவை. சமாதான காலத்தில் சர்ச்சில் போன்றாரின் ஆட்சியில் அமைதி நிலவாது என்ற உண்மையை அந்த நாட்டு மக்கள் உணர்ந்திருந்தனர். தங்கள் வாக்கின் சக்தியைப் பிரிட்டிஷ் மக்கள் உணர்ந்துள்ளதால் அந்த நாடு அரசியலில் இன்று தலைசிறந்து நிற்கிறது. எனவே வரப்போகும் தேர்தலில் நிற்பவர் ஆளும் கட்சியினரானாலும், அல்லது ஒரு அன்னக்காவடியானாலும், நாட்டில் தற்போது தாண்டவமாடும் பட்டினி, பஞ்சம், பிணி, தற்குறித்தனம் இவைகளை ஒழித்துக் கட்டும், உறுதியும் ஆற்றலும் படைத்த ஒருவருக்கே நாம் நமது வாக்கை வழங்குவோமாக.

ஆர். எம். பழனிமுத்து
ராமநாதபுரம்—புதூர்

பொய்யும் மெய்யும்

புதுமைச்சித்தன்

கவிபாடின கம்பனுக்குப்பொன்னைப் அள்ளிக் கொடுத்தார்களாம். அதெல்லாம் அந்தக் காலத்திலே! இப்பொழுது கவிபாடுகிறவனுக்கோ, கதை எழுதுகிறவனுக்கோ ஒரு பிடி புழுதி மண்ணை அள்ளிக் கொடுக்கக் கூட நாதி கிடையாது.

புலவர்களுக்குப் பசும்பொன்னைய் வாரிக் கொடுத்தார்கள் — அதெல்லாம் இப்பொழுது ஏட்டிலே கண்டு படித்துப் பார்த்து மகிழவேண்டிய – படுத்தெழுந்தவுடன் நினைவற்றுப் போகும் கனவு மாதிரி!

பொன்னை அள்ளிக்கொடுத்த காலத்தை யெல்லாம் விட்டு விட்டு, மண்ணை அள்ளிக் கொடுக்கக் கூட நாதியற்ற சமயத்தில், ஒரு பாரதி — ஒரு கு. ப. ரா. — ஒரு புதுமைப்பித்தனைப் போல் காலந்தவறிப் பிறந்து விட்டதற்காகப் பிரபல எழுத்தாளர் திரு. சுயம்பு வருந்தவுமில்லை; வாடவுமில்லை. வருந்தித்தான் பயன் என்னவாம்?...

திரு. சுயம்பு அவர்களின் எழுத்தோவியம் தமது பத்திரிகையில் வெளியாக வேண்டுமென்பதற்காக அவர் வீட்டில் இரட்டைக் காவில் தவமிருந்த பத்திரிகாசிரியர்கள்எத்தனையோ பேர்! இப்படியெல்லாம் இருந்துங்கூட அவருக்கு வருமானமென்னவோ 'டல்' தான். எழுதியே வாழ்வைக் கழித்துவிடலாம் என்ற தவறான நம்பிக்கையில் தாலுகா ஆபீஸ் குமாஸ்தா வேலைக்கு ஒரு தலைமுழுக்குப் போட்டுவிட்டு இலக்கியத் துறையில் புகுந்தார். எதிர்பார்த்தபடி அவர் வாழ்க்கை மலர்ச்சி பெறவில்லை. உண்மைதான்! என்றாலும், சிறுகதை இலக்கியம் அவரால் மலர்ச்சி பெற்றது.

●

அன்றொரு நாள் மாலை ஐந்தரை மணி இருக்கும். எங்கோ வெளியில் சென்றிருந்த சுயம்பு வீட்டிற்குள் நுழைந்தார். ஏகப்பட்ட கிழிசல்களை விசிறி மடிப்பால் மறைத்துக் கொண்டு தன் தோளில் கிடந்த அங்க வஸ்திரத்தைக் கழற்றிக் கொடியில் போட்டார். 'உஸ்' என்ற ஆயாசத்துடன் ஒரு பக்கமாகக் கோணிக் கொண்டு — கித்தான் கிழிந்து, இன்னும் சில விசேஷ அலங்காரங்களுடன் கூடத்தில் கிடந்த 'ஈஸிசேரில்' சாய்ந்தார்.

கணவனின் வருகையை ஓசைக் குறிப்பால் உணர்ந்த அவர் மனைவி பாலாம்பாள், அடுப்பங்கரையை விட்டுக் கூடத்திற்கு வந்தாள்.


"ஏன்னா?..." என்றாள்.

அவளை ஒருதரம் உற்றுப் பார்த்துவிட்டுப் பேசாமல் இருந்தார் சுயம்பு.

"என்ன?......நான் கூப்பிடுறேன்... பேசாமே இருக்கீங்களே!..."

"என்ன பண்ணச் சொல்றே? கூப்பிட்ட உடனே எழுந்திரிச்சுக்





குதிக்கச் சொல்றியா?...இதோ தான் இருக்கேனே. விஷயத்தைச் சொல்லு, கேக்கறேன்...'

"ஒரு துளி மண்ணெண்ணெய் கூட இல்லே! எப்படி வெளக்கு கொளுத்துறதுன்னுதான் தெரியலே!..."

"ஏன்?...அடுத்த வீட்டுலே— எதிர்த்த வீட்டுலே — ஒரு சிமினி எண்ணெ கடனா வாங்கிக்கோயேன். நாளைக்குத் திருப்பிக் குடுத்துட்டாப் போவுது!..."

"இந்த வௌக்கு வக்கிற நேரத்துலே யாரும் எதுவும் கடன் குடுக்க மாட்டாங்க..."

"ஓஹோ! இது வேறயா? அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்றே?"

"ஒரு ஓரணா இருந்தாக் குடுங்களேன். ஒரு காப்புட்டி மண்ணெண்ணெ வாங்கிவரச் சொல்றேன்."

"ஓரணாவா? அதைக் கண்ணாலே பாத்து நாலு நாள் ஆவுது. இன்னிக்கி ராத்திரி ஒரு கத்தெ எழுதித் தொலைக்கணும்... பொகெயிலெ வாங்கக் கூட ஓரணா இல்லியேன்னு நான் தெகெச்சிப் போய்க் கெடக்கிறேன். நீ என்னடான்னா..."

"அந்த மூல வெத்திலெபாக்குக் கடெயிலே ஒரு பொட்ட



லம்புகையிலே கடன்வாங்கிக் கிறது தானே. அங்கேதானே ஒங்களுக் குப் 'பத்து வரவு?"

"பத்து வரவு உண்டு தான். அவன் இன்னிக்கி வார விடு முறென்னு கடையை மூடிட்டான்."

"அது தொலையட்டும். இப்போ வெளக்குக்கொளுத்தவேணுமா? இருளடிச்சிப் போய்க் கெடக்குமே வீடு? சாப்புடுற வரைக்குமாவது வெளக்கு வேணுமா?..."

"ஏன்? கொஞ்சம் கடலெ எண்ணெயை ஒரு அகல்லே போட்டுக் கொளுத்தி வையேன்."

"ஆமா... அது ஒண்ணு தான் கொறச்சல்! இங்கே தாளிக்கிற துக்கே எண்ணெயெக் காணோமாம். அகல் வெளக்கெக் கொளுத்த வேண்டியது தான்!.."

அவர் பதில் பேசவில்லை. பேசினால் நிலைமை மோசமாகி விடும் என்று அவருக்குத் தெரியும். மௌனத்தில் ஆழ்ந்தார். என்ன பேசினாலும் மண்ணெண்ணெய் வாங்கக் காசு கிடைக்கப் போவதில்லை யென்பதை அறிந்து கொண்ட பாலாம்பாள் —அவர் மனைவி —உள்ளே போய் விட்டாள்.

வீட்டிற்குள் இருள்! இலக்கியக் கர்த்தாக்களை வாழ்விக்க வேண்டிய கடமையினின்றும் தவறிவிட்ட தமிழகத்தின் இருதயம் மாதிரி, இருள்!

அவர் மனம், அன்று தாலுகா ஆபீஸில் குமாஸ்தாவாக மாதம் அறுபது ரூபாய்களைச் சுளையாக எண்ணி வாங்கிய காலத்தை நோக்கித் தாவியது. சம்பளம் அறுபது ரூபாய்தான்! இருந்தாலும், மேல் வருமானத்திற்கு நிறைய வழிகள் உண்டு. இந்த மேல் வருமானத்தைத்தான் சில முட்டாள்கள், 'லஞ்சம்' என்கிறார்கள். லஞ்சமாம் லஞ்சம்! லஞ்சம் வாங்கக் கூடாதாம். அது மனச்சாட்சிக்கு விரோதமானதாம். ஒரு புருஷனும் பெண்டாட்டியுமாக இருந்தால் கூட இந்தப் பஞ்சகாலத்தில் அறுபது ரூபாய் போதாது. அப்புறம் குழந்தை, குட்டி, குஞ்சு, குளுவான்கள் என்று குடும்பம் பெருத்துவிட்டால், இந்த அறுபது ரூபாய் எந்த மூலைக்கு? அப்பொழுது மேல் வருமானத்தை—அதாவது லஞ்சத்தை எதிர்பார்க்காவிட்டால் பிச்சையெடுக்க வேண்டியது தான்! மனச்சாட்சிக்கு விரோதம், அப்படி, இப்படி என்று இருக்க முடிகிறதா?...

அதே தாலூகா ஆபீஸ் குமாஸ்தா வேலையில் நிலைத்திருந்தால் இப்பொழுது 'ஹெட் கிளார்க்' ஆகி இருக்கலாம். சம்பளம் — மேல் வருமானம்— வீட்டில் எடுபிடி வேலைகளுக்குப் பியூன்கள்—! எல்லா வசதிகளும் கிடைத்திருக்கும். அதை

யெல்லாம் இப்பொழுது நினைத்து என்ன பயன்?

'ஈஸிசேரி'ல் படுத்திருந்த சுயம்பு எழுந்து உட்கார்ந்தார். அப்பொழுது இரவு ஏழரை மணி! வீட்டிற்குள் இருள்! என்றாலும் வீட்டு முற்றத்தின் வழியாக நிலவு, ஒளியைப் பொழிந்துகொண்டிருந்தது. வீட்டிற்கு வெளியேவாயிற்படிப் பக்கத்தில் தெருவிலிருந்த மின் சாரவிளக்கு சிறிது வெளிச்சத்தைப் பிச்சை போட்டது.

"பாலாம்பா...பாலாம்பா..." என்று கூவினார் சுயம்பு. "ஏன்" என்ற கேள்வியுடன் அவள் வந்தாள்.

"பாலா......ஒண்ணு செய்வோம்...தட்டுலே சாப்பாட்டே போட்டு எடுத்துக்கிட்டு வா... இப்புடி முத்தத்துலே, நிலா வெளிச்சத்துலே உக்காந்து, 'ஜம்'முன்னு சாப்புடுவோம் ...நிலாச் சாப்பாடு..." என்று சிரித்தார் சுயம்பு. அவளும்சிரித்தாள். வேதனைச் சிரிப்பு.

அவர் உத்தரவுப்படியே அவள் சாப்பாட்டை நிலவொளி வீசும் முற்றத்தில் பரிமாறினாள்.

அச்சமயம், "சார்...சார்..." என்ற குரல்! திரும்பிப் பார்த்தார் சுயம்பு. "யாரது—?" என்று கேட்டார்.

"ஏன், சார்—? நான் தான் சார்..அடுத்த வீட்டுக் குருசாமி". —சுயம்புவின் நெருங்கிய நண்பர் குருசாமி உள்ளே வந்தார்.

"ஏன் சார்?...என்ன விசேஷம்?"—உள்ளே உட்கார்ந்த நிலையிலேயே கேட்டார் சுயம்பு.

"ஒண்ணுமில்லே!...ஒருவாரத்துக்கு முந்தி, உங்க கிட்டே வாங்கிக்கிட்டுப் போன 'டால்ஸ்டாய் ஒர்க்ஸ்'சை, 'ரிடர்ன்' பண்ண வந்தேன்..." என்றார் குருசாமி.

சோற்றில் குழம்பை ஊற்றினாள் பாலாம்பாள். சோற்றைப் பிசைந்த வண்ணம், "அப்படி டேபிள்லே போடுங்க, சார்...", என்றார் சுயம்பு.

முற்றத்தில்—நிலா வெளிச்சத்தில் உட்கார்ந்து சாப்பிடும் சுயம்புவை—ஒரு விளக்குக்கூட ஏற்றாமல் வீடு இருண்டு கிடக்கும் கோலத்தை — ஊன்றிப் பார்த்தார் குருசாமி.

"என்ன சார்?...இங்கே சாப்பிடுகிறீர்கள்?...ஒரு வெளக்கு கூடப் பொருத்தலே!..." என்றார் குருசாமி.

"சும்மா...என்னமோ ஒரு ஆசை, .சார்—நிலா வெளிச்சத்துலே உக்காந்து சாப்புடணும்னு! அதனாலேதான், கொளுத்தின வெளக்கையெல்லாம் அணைச்சுட்டு, ஜாலியா முத்தத்துலே—நிலா வெளிச்சத்துலே உக்காந்து சாப்புடுறேன்.."என்றார் சுயம்பு.

"நீங்க மகா ரசிகர், சார்—" என்று குருசாமி விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார்.

"ரசிகனும், ரசிகன்...என் தரித்திரம் அவனுக்கென்ன தெரியும்?"— அவர் முணுமுணுத்தார்.

வேதனை நிறைந்த ஒரு நீண்ட பெருமூச்சின் வெம்மை காற்றோடு கலந்தது.

Edited, Printed and Published by MURUGU SUBBRAMANIAN for PONNI LTD., at PONNIACHAKAM, 16, Seni Amman Koil Street, Tondiarpet Madras—21.